

# மனித உரிமைகளுக்கான பரப்புரை

Right to Life Human Rights Center

# மனித உரிமைகளுக்கான பரப்புரை
# Advocacy for Human Rights

## அத்தியாயம்

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

வாழ்வுரிமைக்கான மனித உரிமைகள் நிலையம்

**தலைப்பு:**

மனித உரிமைகளுக்கான பரப்புரை

**முதலாவது பதிப்பு:**

செப்ரெம்பர் 2024 இல் வெளியிடப்பட்டது

**வெளியீடு:**

வாழ்வுரிமைக்கான மனித உரிமைகள் நிலையம்
56/2, பாலித ப்ளேஸ்
கொழும்பு 9
www.righttolife.lk

© **2024 வாழ்வுரிமைக்கான மனித உரிமைகள் நிலையம்**

**எழுத்தாளர்/ஆசிரியர்:** அஜித் பரகும்

**அட்டை வடிவமைப்பு:** அனுதி நிசல்யா

ISBN: 978-624-5860-10-4

**பொறுப்புத்துறப்பு:**

இந்த பிரசுரத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்கள் என்பதுடன் அவை வாழ்வுரிமைக்கான மனித உரிமைகள் நிலையம் அல்லது அதன் துணை நிறுவனங்களின் உத்தியோகபூர்வ கொள்கை அல்லது நிலைப்பாட்டை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

**இலங்கையில் அச்சிடப்பட்டது**

Design Systems Pvt Ltd, 23/1, 1st Maligakanda Lane, Colombo 10

அனுமதிகள் அல்லது விசாரணைகளுக்கு, தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:

mail@righttolife.lk

# உள்ளடக்கம்


■ முன்னுரை 5

அத்தியாயம் 1:
மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான (HRDs) அறிமுகம் 7

குறிக்கோள்: 7

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் (HRDs): வரைவிலக்கணம் மற்றும் பிரதான இயல்புகள் 7

HRD களின் உலகளாவிய மற்றும் உள்ளூர் பணி: 8

HRDகளுக்கான சட்ட கட்டமைப்புகள் மற்றும் பாதுகாப்புகள் 8

இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் 9

அத்தியாயம் 2:
HRDகளுக்கான பரப்புரையாற்றலின் முக்கியத்துவம் 11

குறிக்கோள்: 11

பரப்புரையாற்றலின் வரைவிலக்கணங்கள் மற்றும் மனித உரிமைகள் பணியில் அதன் வகிபங்கு 11

செயற்பாடு என்பதிலிருந்து பரப்புரையாற்றலை வேறுபடுத்துதல்: ஆக்கபூர்வமான, உறவுமுறை சார்ந்த அணுகுமுறையாக பரப்புரையாற்றல். 12

மனித உரிமைகள் சட்டத்தின் சூழலில் பரப்புரையாற்றல்: பொதுக் கொள்கை, சட்டம் மற்றும் சமூக மாற்றம் ஆகியவற்றில் அதன் தாக்கம். 13

செயற்பாடு: இலங்கையில் வெற்றிகரமான பரப்புரையாற்றல் பிரச்சாரங்கள் பற்றிய கலந்துரையாடல் 14

பரப்புரை மற்றும் ஊக்குவிப்பு 15

அத்தியாயம் 3:
ஓர் வினைத்திறனான பரப்புரைத் திட்டத்தை விருத்தி செய்தல் 17

குறிக்கோள்: 17

பரப்புரை திட்டமிடல் சக்கரத்திற்கான அறிமுகம்: 17

1. பிரச்சினைகளைக் கண்டறிந்து பகுப்பாய்வு செய்தல் 18
2. இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை உருவாக்குதல் 19
3. பங்குதாரர்களை வரைபடமாக்கல் (அதிகாரம்/செல்வாக்கு மற்றும் ஆர்வம்) 20
4. உத்திகளை விருத்தி செய்தல், தந்திரோபாயங்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் செய்தி அனுப்புதல் 21

செயன்முறை பயிற்சி: அடிப்படை பரப்புரை திட்டத்தை உருவாக்குதல் 22

அத்தியாயம் 4:
பரப்புரையாற்றல் உத்திகள் மற்றும் கருவிகள் 23

குறிக்கோள்: 23

பங்குதாரர்களை அடையாளம் கண்டு உறவுகளை கட்டியெழுப்புதல் 23

பேச்சுவார்த்தை (Lobbing), ஊடக ஈடுபாடு மற்றும் வலையமைப்பு 24

பரப்புரையாற்றலுக்கான சமூக ஊடகங்கள்: நிகழ்நிலை தளங்களை அதிகப்படுத்துதல் (நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் இணைய சுதந்திரத்தில் கவனம் செலுத்துதல்). 25

பரப்புரை விடயங்களை விருத்தி செய்தல்: அறிக்கைகள், தகவல் வரைபடங்கள் மற்றும் காணொளிகள் 26

செயன்முறைப் பயிற்சி 27

ஸ்மார்ட் தொலைபேசியைப் பயன்படுத்தி காணொளிகளை பதிவு செய்வதற்கு முன்பாக கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயங்கள் 28

தகவல் வரைபடத்தின் நன்மைகள் 30

வினைத்திறனான தகவல் வரைபடத்தை உருவாக்குவதற்கான உதவிக்குறிப்புகள் 31

தகவல் வரைபடத்தை உருவாக்குவதற்கான கருவிகள் 31

அத்தியாயம் 5:

பரப்புரையாற்றலில் அனர்த்த முகாமைத்துவம் 32

குறிக்கோள்: 32

மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு அபாயங்களைப் புரிந்துகொள்ளுதல் 32

அரசியல், சட்ட மற்றும் பாதுகாப்பு அபாயங்களைக் குறைத்தல் 33

HRDகளுக்கான டிஜிட்டல் பாதுகாப்பு: உணர்திறனான தகவல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பைப் பேணுதல். 34

அத்தியாயம் 6:

பரப்புரையாற்றலில் பால்நிலை உணர்திறன் 35

குறிக்கோள்: 35

பரப்புரையாற்றுவதில் பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் குறிப்பான சவால்கள். 35

பரப்புரையாற்றல் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்தில் பால்நிலை உணர்திறனான அணுகுமுறைகள். 36

சம்பவ ஆய்வுகள் மற்றும் உதாரணங்கள் 38

அத்தியாயம் 7:

காலநிலை மாற்றமும் மனித உரிமைகளின் பரப்புரையாற்றலும் 39

குறிக்கோள்: 39

மனித உரிமைகள் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கம் 39

காலநிலை மாற்றத்தால் நலிவடையக்கூடிய குடித்தொகை 40

ஓர் மனித உரிமையாக சுற்றுச்சூழல் நீதிக்கான பரப்புரையாற்றல் 41

■ முடிவுரை 44

# ■ முன்னுரை

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் (HRDs) உலகம் முழுவதும் நீதி, சமத்துவம் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் முக்கிய வகிபங்கினை கொண்டிருக்கின்றனர். இலங்கையில், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், சட்டரீதியான கட்டுப்பாடுகள் முதல் உடல்ரீதியான அச்சுறுத்தல்கள் வரை குறிப்பிடத்தக்க இடர்களை அடிக்கடி எதிர்கொள்கின்றனர் என்பதுடன், அவர்களின் பணியானது ஓரங்கட்டப்பட்டவர்களுக்கு பரப்புரையாற்றுவதற்கும், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்களுக்கும் முக்கியமானதாகும். அதிகரித்தளவில் சிக்கலான மற்றும் கட்டுப்பாடான சூழலில், குறிப்பாக 2025 இன் 9ம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டம் போன்ற சட்டங்களின் உருவாக்கத்துடன், மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு திறன்கள், கருவிகள் மற்றும் அவர்களின் பரப்புரையாற்றும் பணிகளை வினைத்திறனாகவும் பாதுகாப்பாகவும் செய்வதற்குத் தேவையான உத்திகள் ஆகியவற்றை வழங்குவது முன்னெப்போதையும் விட முக்கியமானதாகும்.

இந்தப் பயிற்சிநெறி அத்தியாயமானது மனித உரிமைகள் பாதுகாவலர்களின் பரப்புரையாற்றும் இயலளவை மேம்படுத்தும் வகையில் அவர்களின் தாக்கத்தை அதிகரிக்கும் அதே நேரத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வழிநடத்த உதவுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ள அத்தியாயங்கள் மனித உரிமை பாதுகாவலர்களின் வகிபங்கு மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் உலகளாவிய மற்றும் உள்ளூர் சவால்களை புரிந்துகொள்வது முதல் மூலோபாய பரப்புரையாற்றும் திட்டங்களை உருவாக்குதல், முக்கிய பங்குதாரர்களை ஈடுபடுத்துதல் மற்றும் விரோதமான சூழல்களில் அபாயங்களைக் குறைத்தல் வரை வெற்றிகரமான பரப்புரையாற்றலின் முக்கிய கூறுகளை குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு அத்தியாயமும் நடைமுறை தீர்வுகள் மற்றும் நிஜ உலக உட்பார்வைகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், கடினமான சூழ்நிலைகளில் மனித உரிமை பாதுகாவலர்கள் நம்பிக்கையுடன் தங்களது பணியைத் தொடர முடியும் என்பதை உறுதி செய்கிறது.

மனித உரிமைப் பணியில் பரப்புரையாற்றுவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. பரப்புரையாற்றுதல் என்பது நிறுவனங்களை பொறுப்புக்கூற வைப்பது மட்டுமல்லாமல், நலிவடையக்கூடிய சமூகங்களைப் பாதுகாக்க தேவையான சட்ட மற்றும் கொள்கை சீர்திருத்தங்களையும் இயக்குகிறது. இந்தப் பயிற்சியானது மனித உரிமைகளுக்கான பாதுகாப்பின் கடைசி அடுக்காகவுள்ள மனித உரிமை பாதுகாவலர்களுக்கு வினைத்திறனான

உத்திகளை உருவாக்குதல், தீர்மானமெடுப்பவர்களுடன் ஈடுபடுதல் மற்றும் அவர்களின் பணியின் உள்ளார்ந்த அபாயங்களை முகாமை செய்தல் ஆகியவற்றில் ஆதரவு அவசியமாகின்றது என்பதை ஏற்றுக்கொள்கிறது.

இந்தப் பயிற்சிநெறியின் முடிவில், HRDக்களுக்கு மனித உரிமைகளுக்காக மிகவும் வினைத்திறனாக பரப்புரையாற்றுவதற்கான அறிவு மற்றும் கருவிகள் வழங்கப்படுவதுடன், அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதுடன், அவர்கள் துன்பங்களை எதிர்கொண்டாலும் நீதி மற்றும் சமத்துவத்தை தொடர்ந்து மேம்படுத்த முடிவதை உறுதி செய்ய முடியும். இந்த கற்றல் அத்தியாயமானது இலங்கையிலும் அதற்கு அப்பாலும் உள்ள HRDக்களுக்கு அவர்களின் துணிச்சலான மற்றும் அத்தியாவசியமான பணிகளைத் தொடர வலுவூட்டும் ஒரு பெறுமதிமிக்க வளமாகச் செயற்படும் என நம்புகிறோம்.

# அத்தியாயம் 1:

# மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான (HRDs) அறிமுகம்

**குறிக்கோள்:**

- **இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் மனித உரிமை பாதுகாவலர்களின் வகிபங்கு மற்றும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்.**

## மனித உரிமைகள் பாதுகாவலர்கள் (HRDs): வரைவிலக்கணம் மற்றும் பிரதான இயல்புகள்

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் (HRDs) என்பவர்கள் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட தனிநபர்கள், குழுக்கள் அல்லது நிறுவனங்களாவர். அவர்கள் பேச்சு சுதந்திரம், நியாயமான விசாரணைகள், பால்நிலை சமத்துவம் மற்றும் ஓரங்கட்டப்பட்ட அல்லது நலிவடையக்கூடிய சமுதாயங்களின் உரிமைகள் போன்ற சுதந்திரங்களுக்காக பல்வேறு களங்களில் பணிபுரிகின்றனர். மனித உரிமை பாதுகாவலர்கள் மனித உரிமைகள் மீறல்களுக்கு அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் தொழிற்துறை நிறுவனங்கள் என்பன பொறுப்புக்கூறுவதற்காக அமைதியான, வன்முறையற்ற வழிமுறைகளைப் பயன்படுத்துவதுடன், அவ்வாறு செய்வதில் பெரும்பாலும் தங்களது சொந்த பாதுகாப்பை பணயம் வைக்கின்றனர்.

மனித உரிமை பாதுகாவலர்களின் பிரதான குணாதிசயங்களில், அமைதியான பரப்புரையாற்றலில் அவர்களின் அர்ப்பணிப்பு, உலகளாவிய மனித உரிமைகள் மீதான அவர்களின் அவதானம் மற்றும் துன்புறுத்தல், வன்முறை மற்றும் சட்டரீதியான சவால்கள் போன்ற ஆபத்துக்களுக்கான அவர்களின் நலிவடையக்கூடியதன்மை ஆகியவை உள்ளடங்கும். இவ்வாறான சவால்கள் இருந்தபோதிலும், மனித உரிமை பாதுகாவலர்கள் உலகளாவிய மற்றும் உள்ளூர் சூழல்களில் மனித உரிமைகளை முன்னேற்றுவதில் முக்கிய பங்கு வகிப்பதுடன், பெரும்பாலும் தங்களுக்கென பரப்புரையாற்ற முடியாதவர்களுக்காக குரல் கொடுக்கின்றனர்.

## மனித உரிமை பாதுகாவலர்களின் உலகளாவிய மற்றும் உள்ளூர் பணி:

உலகளாவிய ரீதியில், மனித உரிமை பாதுகாவலர்கள் பல்வேறுபட்ட சூழல்களிலும் பெரும்பாலும் விரோதமான சூழல்களிலேயே இயங்குவதுடன், அரசியல் அடக்குமுறை, ஆயுத மோதல்கள் அல்லது குறிப்பிடத்தக்க சட்ட சவால்களை அனுபவிக்கும் பிராந்தியங்களில் உரிமைகளுக்காக பரப்புரையாற்றுகின்றனர் அவர்களின் பணி சட்ட பரப்புரை மற்றும் பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் முதல் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடி ஆதரவை வழங்குவது வரை உள்ளன.

உதாரணமாக, இலங்கையில் வாழ்வுரிமைக்கான மனித உரிமைகள் நிலையம் (R2L) நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக பரப்புரையாற்றுவதில் மனித உரிமை பாதுகாவலர்களின் முக்கியமான பங்கை எடுத்துக்காட்டுகிறது. 2003 இல் ஸ்தாபிக்கப்பட்ட R2L, வலுக்கட்டாயமாக காணாமல் போதல்கள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதைகள் உட்பட அரசால் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவதில் கவனம் செலுத்துகிறது. R2L பாதிக்கப்பட்டவர்களுக்கு முக்கியமான சட்ட உதவிகளை வழங்குவதுடன், பொது பரப்புரையாற்றலில் ஈடுபட்டு நாடு முழுவதும் உள்ள மனித உரிமைகள் முதலுதவி நிலையங்களின் (HRFACs) வலையமைப்பு மூலமாக மனித உரிமை மீறல்கள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குகிறது.

R2L, இலங்கையில் மனித உரிமை மீறல்களை முன்னிலைப்படுத்தி, பல்லூடகத் தளங்கள் மூலமாக மனித உரிமை பாதுகாவலர்களின் குரல்களை விரிவுபடுத்துகிறது. இந்த உள்ளூர் பணியானது மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பரந்த உலகளாவிய முயற்சியின் ஒரு பகுதியாகும் என்பதுடன் உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெறுவதற்கான தளத்தை வழங்குகிறது.

## HRDகளுக்கான சட்ட கட்டமைப்புகள் மற்றும் பாதுகாப்புகள்

சர்வதேச அளவில், **மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான ஐக்கிய நாடுகளின் பிரகடனம் (1998)** போன்ற கட்டமைப்பின் கீழ் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இந்த பிரகடனம் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பைப் பெறுவதற்கும், அச்சுறுத்தல்கள் அல்லது வன்முறைகளை எதிர்கொள்ளாமல் சுதந்திரமாக செயற்படுவதற்குமான மனித உரிமை பாதுகாவலர்களின் உரிமைகளை கோடிட்டுக் காட்டுகிறது. **மனித உரிமைகள் பாதுகாவலர்களின் நிலைமை குறித்த விசேட அறிக்கையாளர்** மூலமாகவும் ஐ.நா மேற்பார்வை செய்வதுடன், இது உலகளாவியளவில் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள உதவுகிறது.

இலங்கையில், மனித உரிமை பாதுகாவலர்களுக்கான சட்டப் பாதுகாப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. அரசியலமைப்பு சட்டமானது பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்தாலும், இந்த உரிமைகள் நடைமுறையில் எப்போதும் நிலைநாட்டப்படுவதில்லை. **நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின்** அறிமுகம் குறிப்பாக டிஜிட்டல் பரப்புரையாற்றல் மற்றும் கருத்துச் சுதந்திரம் தொடர்பாக மேலும் கட்டுப்பாடுகளைச் சேர்க்கிறது. இந்தச் சட்டமூலம் நிகழ்நிலை தகவல்தொடர்பாடல்களை இலக்காகக் கொண்டுள்ளதுடன், இது மனித உரிமை பாதுகாவலர்கள் டிஜிட்டல் தளங்களில் சுதந்திரமாக செயற்படுவதை மிகவும் சவாலாக ஆக்குகிறது.

மேலும், அச்சுறுத்தல்கள் அல்லது வன்முறைகளை எதிர்கொள்ளும் போது இலங்கை மனித உரிமை பாதுகாவலர்களுக்கு சட்டப்பூர்வ அணுகல் குறைவாகவே உள்ளதுடன், இது அவர்களின் பணியை வினைத்திறனாக செயற்படுத்தும் திறனை பலவீனப்படுத்துகிறது. சர்வதேச கட்டமைப்புகள் குறித்தளவிலான பாதுகாப்பை வழங்கினாலும், வலுவான உள்ளூர் பொறிமுறைகள் இல்லாமை மனித உரிமை பாதுகாவலர்களை பாதிக்கப்படக்கூடிய நிலையில் வைக்கிறது.

## இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்கள் மனித உரிமைகளுக்காக பரப்புரையாற்றும் அவர்களின் திறனைத் தடுக்கும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த சவால்களில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

### 1. சட்ட தடைகள்:

**நிகழ்நிலை காப்புச் சட்டமூலம்** மற்றும் பிற கட்டுப்படுத்தும் சட்டங்கள் மனித உரிமைகள் காரணங்களுக்காக சுதந்திரமாக கருத்துக்களை வெளிப்படுத்தும் அல்லது பொது ஆதரவைத் திரட்டும் மனித உரிமை பாதுகாவலர்களின் திறனைக் குறைக்கின்றன. அதன் கீழ், சில அறிக்கைகள் உண்மைக்குப் புறம்பானவை என்று தீர்மானிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது. இந்தச் சட்டங்கள் பெரும்பாலும் கருத்து வேறுபாடுகளை அமைதிப்படுத்தப் பயன்படுத்தப்படுவதுடன், இது சட்டரீதியான பின்விளைவுகளுக்கு அஞ்சும் HRDகளிடையே சுய-தணிக்கைக்கு வழிவகுக்கும்.

### 2. பாதுகாப்பு அபாயங்கள்:

மனித உரிமை பாதுகாவலர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து தொடர்ச்சியான துன்புறுத்தல், மிரட்டல் மற்றும் வன்முறை அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக ஊழல்,

சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் அல்லது பொலிஸ் துஷ்பிரயோகம் போன்ற அரசியல் ரீதியாக முக்கியமான பிரச்சினைகளில் பணிபுரிபவர்களுக்கு உடல்ரீதியான அச்சுறுத்தல்கள் மற்றும் கண்காணிப்பு பொதுவானதாகும்.

**3. அரசியல் தலையீடு:**

அரச நிறுவனங்கள் இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்களை அடிக்கடி எதிரிகளாகப் பார்க்கிறார்கள் என்பதுடன் இது அவர்களின் செயற்பாடுகள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு வழிவகுக்கிறது. அரசால் வழிநடாத்தப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக பரப்புரையாற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் சட்ட நடவடிக்கை அல்லது அவர்களின் பணியை பொதுவில் இழிவுபடுத்துதல் உள்ளிட்ட அரசியல் தலையீட்டை அடிக்கடி எதிர்கொள்கின்றனர். அரசியல் சூழலானது பழிவாங்கலை எதிர்கொள்ளாமல் பரப்புரையாற்றுவதில் மனித உரிமை பாதுகாவலர்கள் ஈடுபடுவதை கடினமாக்குகிறது.

**4. வளங்கள் மற்றும் ஆதரவு பற்றாக்குறை:**

பல மனித உரிமை பாதுகாவலர்கள் வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் குறைந்தளவிலான நிறுவன ஆதரவுடன் பணியாற்றுவதால், நீண்டகால பரப்புரையாற்றும் முயற்சிகளைத் தக்கவைத்துக்கொள்வது கடினமாகிறது. இந்த இடைவெளியைக் குறைப்பதில் பயிற்சி, சட்ட உதவி மற்றும் களமட்ட அணிதிரட்டல் மூலம் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு ஆதரவளிக்கும் R2L இன் முயற்சிகள் முக்கியமானவையாகும்.

இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்களின் போராட்டங்கள் மற்றும் வெற்றிகளை உள்ளடக்கிய நிஜ வாழ்க்கை சம்பவத்தை பகுப்பாய்வு செய்யவும். இது பங்கேற்பாளர்கள் மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் நிஜ உலக சவால்களைப் புரிந்துகொள்ளவும், இந்தத் தடைகளை வெற்றி கொள்வதற்கான நடைமுறை தீர்வுகளை ஆராயவும் உதவும்.

இலங்கையில் பிரபல மனித உரிமைப் பாதுகாவலரான ருக்கி பெர்னாண்டோ, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் மார்ச் 2014 இல் கைது செய்யப்பட்டார். வடமாகாணத்தில் கைது செய்யப்பட்ட பெண் மற்றும் சிறுமிக்கு ஆதரவளிக்க முற்பட்ட வேளையில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவருடன் அவர் கைது செய்யப்பட்டார். அவர் பயங்கரவாதத்தை ஆதரிப்பதாக அரசாங்கம் குற்றம் சாட்டியது, ஆனால் பலர் இந்த குற்றச்சாட்டுகள் தவறானவை என்றும் அவரை மௌனமாக்குவதாகவும் நம்பினர். சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கடுமையான விமர்சனங்களைத் தொடர்ந்து அவர் விடுவிக்கப்பட்டார். இந்த சம்பவம் இலங்கையில் செயற்பாட்டாளர்களை குறிவைக்க பயங்கரவாத தடைச்சட்டம் எவ்வாறு பெரும்பாலும் தவறாக பயன்படுத்தப்படுகிறது என்பதை காட்டுகிறது.

## அத்தியாயம் 2:

# மனித உரிமை பாதுகாவலர்களுக்கான பரப்புரையாற்றலின் முக்கியத்துவம்

**குறிக்கோள்:**

- **பரப்புரையாற்றலின் அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்துகொண்டு, மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு (HRDs) அது ஏன் முக்கியமானது என்பதைப் புரிந்து கொள்ளுதல்.**

### பரப்புரையாற்றலின் வரைவிலக்கணங்கள் மற்றும் மனித உரிமைகள் பணியில் அதன் வகிபங்கு

பரப்புரையாற்றல் என்பது தீர்மானமெடுப்பவர்களை பாதிக்கும் நோக்கத்துடன் நேர்மறையான சமூக மாற்றங்களைக் கொண்டுவரும் ஓர் காரணம், கொள்கை அல்லது யோசனைக்காக தீவிரமாக ஆதரிக்கும், ஊக்குவிக்கும் அல்லது பரப்புரையாற்றும் செயற்பாடாகும். பரப்புரையாற்றலானது மனித உரிமைப் பணியின் சூழலில், உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் நிறைவேற்றத்தை முன்னெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மனித உரிமை பாதுகாவலர்கள் அநீதிகளுக்கு சவால் விடுவதற்கும், அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களை பொறுப்புக்கூற வைப்பதற்கும், பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாக்க தேவையான சட்ட சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் பரப்புரையாற்றலை மேற்கொள்ளுகின்றனர்.

பரப்புரையாற்றல் நடைமுறையானது பெரும்பாலும் ஆராய்ச்சி, கூட்டணியை கட்டியெழுப்புதல், மூலோபாய செய்தி அனுப்புதல் மற்றும் முக்கிய பங்குதாரர்களுடனான நேரடி ஈடுபாடு உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கியது. மனித உரிமைகள் மற்றும் பரப்புரையாற்றல் அமைப்புகள் பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கொள்கையில் செல்வாக்கு செலுத்துதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் நிவர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதன் மூலம் பரப்புரையாற்றுவதில் ஈடுபடுகின்றன. பரப்புரையாற்றல் மூலமாக, மனித உரிமைகள் மீறல்களுக்கு கவனம் செலுத்தவும், நீதி, சமத்துவம் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் முறையான மாற்றங்களுக்கு அழுத்தம் கொடுக்கவும் மனித உரிமை பாதுகாவலர்களால் இயலுகின்றது.

## செயற்பாடு என்பதிலிருந்து பரப்புரையாற்றலை வேறுபடுத்துதல்: ஆக்கபூர்வமான, உறவுமுறை சார்ந்த அணுகுமுறையாக பரப்புரையாற்றல்.

பரப்புரையாற்றல் மற்றும் செயற்பாடு ஆகியவை நெருங்கிய தொடர்புடையவை என்பதுடன் பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்துவதாக இருந்தாலும், அவை அவற்றின் முறைகள் மற்றும் நோக்கங்களில் கணிசமாக வேறுபடுகின்றன. **பரப்புரையாற்றல்** பொதுவாக ஆக்கபூர்வமானது என்பதுடன் உறவுமுறை சார்ந்ததாகும், நிறுவப்பட்ட அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்குள் மாற்றத்தை அடைவதற்காக தீர்மானமெடுப்பவர்களுடன் உரையாடல் மற்றும் ஒத்துழைப்பில் கவனம் செலுத்துகிறது. பரப்புரையாற்றல் என்பது பொதுவாக பொதுக் கொள்கைகள் அல்லது சட்டங்களில் செல்வாக்கு செலுத்துவதற்காக முக்கிய பங்குதாரர்களுடன் பேச்சுவார்த்தை (Lobbing), கொள்கை ஈடுபாடு மற்றும் பங்காண்மைகளை உருவாக்குதல் போன்ற விரோதமற்ற அணுகுமுறைகளை உள்ளடக்கியதாகும். மனித உரிமை பாதுகாவலர்கள் மனித உரிமைகள் மீறல்களை நிவர்த்தி செய்வதற்கும், கட்டமைக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் மற்றும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டின் மூலம் தீர்வுகள் மற்றும் சீர்திருத்தங்களை முன்வைப்பதற்கும், “அமைப்புக்குள்” பணியாற்றுவதற்கு பரப்புரையாற்றலைப் பயன்படுத்துகின்றன.

இதற்கு நேர்மாறாக, **செயற்பாடு** என்பது பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அல்லது குறிப்பிட்ட சமூக அல்லது அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க அரச நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுக்கின்ற அதிகளவில் நேரடியான மற்றும் முரண்பாடான நடவடிக்கைகளை உள்ளடக்கியது. ஆர்வலர்கள் ஒரு காரணத்திற்காக கவனத்தை ஈர்ப்பதற்காக போராட்டங்கள், குடிமக்களின் கீழ்ப்படியாமை அல்லது பிற வன்முறையற்ற நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யலாம். மனித உரிமைகளை ஊக்குவிப்பதில் பரப்புரையாற்றல் மற்றும் செயற்பாடு இரண்டும் முக்கியமானவை என்றாலும், நீண்ட கால உறவுகளை கட்டியெழுப்புவதற்கும், முறையான அமைப்புகளுக்குள் பணியாற்றுவதற்கும் பரப்புரையாற்றல் முன்னுரிமை அளிக்கின்ற அதேசமயம் செயற்பாடானது களமட்ட அணிதிரட்டல் மற்றும் பொது ஆர்ப்பாட்டங்களில் அதிக கவனம் செலுத்துகிறது.

**உதாரணம்:** 2022 இல் பொருளாதார நெருக்கடி ஒரு முக்கிய நிலைக்கு அதிகரித்தவுடன், இலங்கை முழுவதும் தோன்றிய பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செயற்படுதல் எனும் வகையின் கீழ் வருகின்றன. இவை அப்போதுள்ள ஆட்சியை நிராகரித்து புதிய நிர்வாகத்தை ஸ்தாபிப்பதை நோக்கமாகக் கொண்ட நேரடியான மற்றும் மோதல் ஆர்ப்பாட்டங்களாகும். எவ்வாறாயினும், இவற்றுக்கு மத்தியில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

மற்றும் நீதியான சமூகத்திற்கான தேசிய இயக்கம் போன்ற அமைப்புகள் ஆக்கபூர்வமான மாற்றத்தை நோக்காக கொண்ட முயற்சிகளில் ஈடுபட்டன. இந்த நோக்கத்தை அவர்கள் பொது ஆலோசனைகள், முறையான தீர்வுகளை உருவாக்குதல் மற்றும் அந்த தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் உரையாடல்கள் போன்ற முன்முயற்சிகள் மூலம் பின்பற்றினர்.

## மனித உரிமைகள் சட்டத்தின் சூழலில் பரப்புரையாற்றல்: பொதுக் கொள்கை, சட்டம் மற்றும் சமூக மாற்றம் ஆகியவற்றில் அதன் தாக்கம்.

மனித உரிமைகள் சட்டத்தின் எல்லைக்குள் பரப்புரையாற்றல் என்பது பொதுக் கொள்கையை வடிவமைப்பதற்கும், சட்டத்தை சீர்திருத்துவதற்கும், சமூக மாற்றத்தில் செல்வாக்கு செலுத்துவதற்குமான ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். மனித உரிமைகள் மற்றும் பரப்புரையாற்றல் நிறுவனங்கள் மனித உரிமைகளின் முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பிற்காக அடிக்கடி சட்ட கட்டமைப்பைப் பயன்படுத்துகின்றன. இது சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளை அங்கீகரித்தல், அநீதியான சட்டங்களை நீக்குதல் அல்லது ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களின் உரிமைகளை நிலைநிறுத்தும் புதிய சட்டத்தை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

உதாரணமாக, இலங்கையில், பரப்புரையாற்றல் முயற்சிகள், பொது நிறுவனங்களிடமிருந்து அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் **தகவல் அறியும் உரிமைச் சட்டம்** (RTI) உட்பட குறிப்பிடத்தக்க சட்டச் சீர்திருத்தங்களுக்கு வெற்றிகரமாக வழியமைத்துள்ளன. 2002 இல் முன்னராக ஊடகவியலாளர்களின் குரல்களை ஒடுக்கவும் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்பட்ட **குற்றவியல் அவதூறு சட்டங்களை** ரத்து செய்வதற்கும் பரப்புரையாற்றல் பிரச்சாரங்கள் கருவியாக இருந்தன.

வினைத்திறனான பரப்புரையாற்றல் பிரச்சாரங்கள் கொள்கை வகுப்பாளர்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் ஈடுபடுவதன் மூலம் அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் கொள்கைகளால் செல்வாக்கு செலுத்தலாம். இத்தகைய முயற்சிகள் மனித உரிமைகள் தரநிலைகள் சட்ட கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைக்கப்படுவதையும் சட்டத்தின் ஆட்சி தனிநபர்களை மீறல்களில் இருந்து பாதுகாக்கிறது என்பதையும் உறுதி செய்கிறது. பரப்புரையாற்றலின் தாக்கம் சட்டச் சீர்திருத்தங்களுக்கு அப்பால் பொதுமக்களின் நடத்தை மற்றும் விழுமியங்களைப் பாதிக்கிறது. நீடித்த பிரச்சாரங்கள் மூலம், மனித உரிமை பாதுகாவலர்கள் பொது விழிப்புணர்வை ஏற்படுத்தலாம், சமுதாயங்களுக்கு அறிவூட்டலாம் மற்றும் நீதி மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்புகளை கோருவதற்கு தனிநபர்களை அணிதிரட்டலாம்.

இந்த செயன்முறை மனித உரிமைகளை மதிக்கும் கலாச்சாரத்தை வளர்க்கின்றதுடன் நீடித்த சமூக மாற்றத்திற்கு பங்களிக்கிறது.

## செயற்பாடு: இலங்கையில் வெற்றிகரமான பரப்புரையாற்றல் பிரச்சாரங்கள் பற்றிய கலந்துரையாடல்

பங்கேற்பாளர்கள் இலங்கையில் வெற்றிகரமான பரப்புரையாற்றல் பிரச்சாரங்களின் நிஜ உலக உதாரணங்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுவார்கள். சம்பவ ஆய்வுகளில் பின்வருவன உள்ளடங்கும்:

- **தகவல் அறியும் உரிமைச் சட்ட (RTI) பிரச்சாரம்:** ஓர் பத்தாண்டு கால பரப்புரை முயற்சியின் விளைவாக 2016 இல் RTI சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை அதிகரித்ததுடன் குடிமக்களின் பொதுத் தகவலுக்கான அணுகலை மேம்படுத்தி, அதிகரித்த பொறுப்புக்கூறலுக்கு பங்களித்தது.

- **கருத்துச் சுதந்திரத்திற்கான பரப்புரை:** 2002 இல் குற்றவியல் அவதூறுச் சட்டங்களை நீக்குவதற்கு வழிவகுத்த இந்த பிரச்சாரமானது, ஊடகவியலாளர்களை மிரட்டுவதற்கும் பேச்சு சுதந்திரத்தை முடக்குவதற்கும் பயன்படுத்தப்பட்ட அடக்குமுறை சட்ட ஏற்பாடுகளை நீக்கியது. இந்த பரப்புரையின் வெற்றி இலங்கையில் ஊடக சுதந்திரத்தை கணிசமாக மேம்படுத்தியது.

இலங்கை வெற்றிகரமான பரப்புரை பிரச்சாரங்களுக்கு பல உதாரணங்களை வழங்குகிறது. ஊழலுக்கு எதிரான தற்போதைய பரப்புரைகள் அத்தகைய ஒரு உதாரணமாகும். அரசியல் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களின் முயற்சியால், அரசாங்கம் 2023 ஆம் ஆண்டின் 9ம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியதுடன், இது இந்த பரப்புரைப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைற்கல்லைக் குறிக்கிறது. மேலும், கடந்த காலத்தில் ஊழல் மூலம் பெற்ற சொத்துக்களை மீட்பதை நோக்கமாகக் கொண்ட சட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரச சீர்திருத்தங்கள் மூலம் இனப்பிரச்சினைகளுக்கான நிலையான தீர்வுகளுக்கான இயக்கம் இலங்கையில் குறைந்த வெற்றிகரமான பரப்புரை பிரச்சாரங்களில் ஒன்றாகும். 1987 இல் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம்

சில முன்னேற்றங்கள் எட்டப்பட்டாலும், நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையால் இதற்கு மேல் முன்னேற முடியவில்லை. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் குறிப்பிடத்தக்க சர்வதேச நிதி பங்களிப்புகள் இருந்தபோதிலும், முடிவுகள் சர்ச்சைக்குரியதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இருக்கின்றன.

## பரப்புரை மற்றும் ஊக்குவிப்பு

பரப்புரை மற்றும் ஊக்குவிப்பு இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக ஆதரவைப் பெறும்போது, புலனாகு நிலை அல்லது அதை சமூகத்திற்குத் தெரியப்படுத்துவது இன்றியமையாததாவதுடன், இந்த விடயத்தில் ஊக்குவிப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான நிதி திரட்டுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பிரச்சாரம், பரப்புரை மற்றும் ஊக்குவிப்பு ஆகிய இரண்டின் கூறுகளையும் ஒருங்கிணைக்கும்.

ஊக்குவிப்பானது சமூக மாற்றத்தை உருவாக்க விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஈடுபாட்டை வளர்ப்பதற்கும் உதவியாக இருக்கும். இது பரப்புரை முயற்சிகள் விரும்பிய நோக்கங்களுடன் ஒத்துப்போவதை உறுதி செய்கிறது. குடித்தொகைக் கட்டுப்பாட்டிற்காக குடும்பக் கட்டுப்பாடு சங்கத்தால் ''**சிறிய குடும்பம், விலைமதிப்பற்ற குடும்பம்**'' என்ற கருப்பொருளின் கீழ் நடாத்தப்பட்ட விளம்பரப் பிரச்சாரம் ஒரு உதாரணமாகும்.

1970களின் முற்பகுதியில், அடி, மைல், பவுண்ட் மற்றும் கலன் போன்ற முன்னர் பயன்படுத்தப்பட்ட அளவீட்டு அலகுகளுக்குப் பதிலாக மெட்ரிக் முறைமையைப் பின்பற்ற இலங்கை முடிவு செய்தது. இந்த மாற்றத்துடன் கூடிய பரப்புரை மற்றும் விளம்பர முயற்சிகள் பொது தழுவலுக்கு வெற்றிகரமாக உதவியது. இதேபோல், மக்கள் மத்தியில் கழிப்பறைகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பிரச்சாரங்கள் வெற்றிகரமான பரப்புரைக்கான மற்றொரு உதாரணமாகும். கே.ஜெயதிலகவின் “எங்களுக்கும் ஒரு கழிப்பறை வேண்டும்” என்ற சிறுகதை, தங்களது வீட்டில் கட்டப்பட்ட அரசு மானியத்துடன் கூடிய மூடப்பட்ட கழிவறையை குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை அழகாக சித்தரிக்கிறது.

மற்றொரு குறிப்பிடத்தக்க ஊக்குவிப்பு முயற்சியானது, திட்டமிடப்படாத கர்ப்பமாதலைத் தடுக்க மற்றும் எச்.ஐ.வி போன்ற பாலியல் ரீதியாக பரவும் நோய்த்தொற்றுகளிலிருந்து பாதுகாப்பதற்கு ஆணுறை பயன்பாட்டை ஊக்குவிக்கும் பிரச்சாரமாகும். இந்த பிரச்சாரம் தாக்கத்தை ஏற்படுத்தும் பரப்புரை மற்றும் ஊக்குவிப்புக்கான ஒரு அழுத்தமான உதாரணமாக உள்ளது.

இந்தச் செயற்பாட்டின் மூலம், பங்கேற்பாளர்கள் இந்த பிரச்சாரங்களில் எதிர்கொள்ளும் உத்திகள், தந்திரோபாயங்கள் மற்றும் சவால்களை பகுப்பாய்வு செய்வதுடன், வெற்றிகரமான மனித உரிமைகள் பரப்புரைக்கு பங்களிக்கும் பல்வேறு கூறுகளைப் புரிந்துகொள்வார்கள். பங்கேற்பாளர்கள் இந்த பிரச்சாரங்கள் எவ்வாறு பொதுக் கொள்கையை வடிவமைத்துள்ளது மற்றும் சமூக மாற்றங்களுக்கு பங்களித்தது, எதிர்கால பரப்புரை முயற்சிகளுக்கு முன்மாதிரியாக எவ்வாறு செயற்படுகிறது என்பதையும் ஆராய்வார்கள்.


## அத்தியாயம் 3:

# ஓர் வினைத்திறனான பரப்புரைத் திட்டத்தை விருத்தி செய்தல்

**குறிக்கோள்:**

- **மனித உரிமைகள் பாதுகாவலர்களை (HRDs) மூலோபாய மற்றும் நடைமுறையான பரப்புரை திட்டங்களை உருவாக்குவதற்கான திறன்களுடன் வசதிப்படுத்துதல்.**

**பரப்புரை திட்டமிடல் சக்கரத்திற்கான அறிமுகம்:**




**பிரச்சினையை கண்டறிதல் ➢ பிரச்சினையை பகுப்பாய்வு செய்தலும் சாத்தியமான தீர்வுகளும் ➢ பங்குதாரர்கள் மற்றும் சுற்றுச்சூழலை மதிப்பீடு செய்தல் ➢ குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அமைத்தல் ➢ கொள்கை நிலைப்பாடு மற்றும் கோரிக்கைகளை தெளிவுபடுத்துதல் ➢ தந்திரோபாயங்களைத் தேர்ந்தெடுத்தல் ➢ செய்திகளை உருவாக்குதல் ➢ ஒரு பரப்புரை உத்தியை உருவாக்குதல் ➢ அமுல்படுத்துதல் ➢ மீளாய்வு செய்தல் ➢ பின்னூட்டங்களை சேகரித்தல் மற்றும் செம்மைப்படுத்துதல்**

**பரப்புரை திட்டமிடல் சக்கரம்** என்பது ஓர் வெற்றிகரமான பரப்புரையாற்றல் பிரச்சாரத்தை உருவாக்குவதற்கும் அமுல்படுத்துவதற்கும் தேவையான அத்தியாவசிய படிநிலைகள் மூலம் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு வழிகாட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு மூலோபாய கட்டமைப்பாகும். பரப்புரையாற்றல் என்பது இயல்பாகவே திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்ந்து அறிவிக்கும் ஓர் சுழற்சி செயன்முறையாகும். இந்தக் கருவியானது, பரப்புரையாற்றலை தொடர்ந்து முகாமை செய்யக்கூடிய தொடர்களாக உடைப்பதுடன், ஒவ்வொரு கட்டமும் மூலோபாயமானது, குறிப்பானது மற்றும் அளவிடக்கூடிய விளைவுகளை அடைவதை இலக்காகக் கொண்டது என்பதை உறுதி செய்கின்றது. பரப்புரை திட்டமிடல் சக்கரமானது, மனித உரிமை பாதுகாவலர்களுக்கு பிரச்சினையை அடையாளப்படுத்தல், பங்குதாரர் வரைபடமாக்கல் மற்றும் செய்தி உருவாக்கம் உள்ளிட்ட முக்கியமான கூறுகளை முறையாக கையாள்வதற்கு உதவுவதுடன் ஒவ்வொரு பரப்புரையாற்றல் திட்டமும் சிறப்பாகவும் வினைத்திறனாகவும் இருப்பதை உறுதிசெய்கின்றது.

## 1. பிரச்சினைகளைக் கண்டறிந்து பகுப்பாய்வு செய்தல்

ஒரு பரப்புரை திட்டத்தை வடிவமைப்பதில் முதலாவது படி கவனம் தேவைப்படும் முக்கிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு பகுப்பாய்வு செய்வதாகும். எந்த மனித உரிமை மீறல்கள் அல்லது சமூக அக்கறைகள் மிகவும் அவசரமானவை மற்றும் அவர்களின் சமுதாயங்களுக்கு பொருத்தமானவை என்பதை HRDக்கள் தீர்மானிக்க வேண்டும். இதில் பிரச்சினையை அங்கீகரிப்பது மட்டுமல்லாமல், அதன் அடிப்படை காரணங்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகளைப் புரிந்துகொள்வதும் உள்ளடங்கும். பின்வரும் முக்கிய வினாக்கள் இந்த செயன்முறைக்கு வழிகாட்டுகின்றன:

- **இந்த பிரச்சினை எங்களது நிறுவனத்தின் நோக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா?**
- **இந்த பிரச்சினை எங்களது இலக்கு சமுதாயங்களை எவ்வாறு பாதிக்கின்றது?**
- **மாற்றத்திற்கான அவசியத்தை எவ்வாறான சான்றுகள் ஆதரிக்கின்றன?**

ஆராய்ச்சி மற்றும் சமுதாய உள்ளீடுகளால் ஆதரிக்கப்படுகின்ற பிரச்சினையின் முழுமையான பகுப்பாய்வு, பரப்புரையாற்றுவதற்கான வலுவான அடித்தளத்தை அமைப்பதற்கு அவசியமாகும். பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் மற்றும்

பரந்த பங்குதாரர்கள் ஆகிய இருவருடனும் எதிரொலிக்கும் உண்மையான கரிசனங்களை பரப்புரை திட்டம் நிவர்த்தி செய்வதை இந்த படிநிலை உறுதி செய்கிறது.

உதாரணமாக, நிகழ்நிலை காப்புச் சட்டம் மனித உரிமைப் பாதுகாவலர்களின் பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, இச்சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு ஒரு பரப்புரை பிரச்சாரம் அவசியமாகும். இந்தச் சட்டம் 2024ல் அவசரமாக நிறைவேற்றப்பட்டாலும், சிவில் சமூகத்தின் எதிர்ப்பின் காரணமாக, திருத்தங்கள் அவசியம் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அவர்கள் ஒரு வரைவு திருத்த சட்டமூலத்தை தாக்கல் செய்துள்ளனர். இந்த வரைவு ஆய்வு செய்யப்பட வேண்டியதுடன், மேலும் பரப்புரை முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 2. இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை உருவாக்குதல்

பிரச்சினை தெளிவாக வரையறுக்கப்பட்டவுடன், ர்சுனுக்கள் உறுதியான இலக்குகளையும் நோக்கங்களையும் நிறுவ வேண்டும். இலக்குகள் என்பன சட்டச் சீர்திருத்தங்கள் அல்லது அதிகரித்த மனித உரிமைப் பாதுகாப்புகள் போன்ற **நீண்ட கால விளைவுகளாக** பரப்புரை பிரச்சாரம் அடைய முயல்பவையாகும். இவை பரப்புரையாற்றல் நிறுவனத்தின் பரந்த பணிக்கூற்றுடன் இணைக்கப்பட வேண்டும்.

மறுபுறம், குறிக்கோள்கள், இந்த விரிவான இலக்குகளை அடைவதற்கு பங்களிக்கும் **குறிப்பான, குறுகிய கால செயற்பாடுகளாகும்.** நன்கு வரையறுக்கப்பட்ட குறிக்கோள்கள்:

- **அளவிடக்கூடியது**: முன்னேற்றம் அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும்.
- **யதார்த்தமானது**: கிடைக்கக்கூடிய வளங்கள் மற்றும் நேரத்தின் அடிப்படையில் இலக்குகள் அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.
- **காலவரையறையுடையது**: ஒவ்வொரு நோக்கத்தையும் அடைவதற்கு தெளிவான காலவரையறையை உருவாக்க வேண்டும்.

தெளிவான குறிக்கோள்கள் பரப்புரையாற்றல் பிரச்சாரங்கள் கவனத்துடன் இருப்பதற்கும் வெற்றியை மதிப்பிடுவதற்கான அளவீடுகளை வழங்கவும் உதவுகின்றன. உதாரணமாக, நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தங்களை பரிந்துரைப்பது ஓர் இலக்காக இருக்கும் அதே நேரத்தில் குறிக்கோளானது ஆறு மாதங்களுக்குள் பாதிக்கப்பட்ட சமூகங்களிலிருந்து உள்ளீடுகளைச் சேகரிப்பதற்காக மூன்று பங்குதாரர் ஆலோசனைகளை ஏற்பாடு செய்வதாகும்.

இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைப் பற்றி மேலும் கலந்துரையாடும் போது, இலக்குகளின் யதார்த்தத்தை ஒரு உதாரணத்துடன் தெளிவுபடுத்தலாம். இலங்கையில் உள்ள மனித உரிமைப் பாதுகாவலர்களில் ஒரு பகுதியினர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) முழுமையாக நீக்க வேண்டும் என்று பரப்புரையாற்றுகின்றனர். பயங்கரவாதம் தொடர்பான பிரச்சினைகளுக்கு பொதுச் சட்டத்தின் கீழ் தீர்வு காண முடியும் என்று அவர்கள் வாதிடுகின்றனர். எவ்வாறாயினும், பயங்கரவாதம் என்பது இலங்கையையும் பாதிக்கின்ற ஒரு உலகளாவிய பிரச்சினை என்றும், பல நாடுகள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை இயற்றியுள்ள சூழலில், பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதை விட மேம்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவது அவசியம் என்றும் அரசாங்கம் வாதிடுகிறது.

இந்த நீண்டகால கருத்து வேறுபாட்டிற்கு மத்தியில், முயற்சித்த போதிலும் ஒப்பீட்டளவில் ”முற்போக்கான” பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அடுத்தடுத்த அரசாங்கங்களால் முடியவில்லை. இதன் விளைவாக, 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது 40 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது. இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் மீதான கலந்துரையாடல்கள், PTAக்குள் உள்ள சில குறிப்பிடத்தக்க பிரச்சினைகளுக்கு தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆனால் எதிர்ப்பைச் சந்தித்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டமூலம் போன்ற முன்மொழிவுகளுக்கான எதிர்ப்பின் விளைவுகளில் கவனம் செலுத்தலாம்.

## 3. பங்குதாரர்களை வரைபடமாக்கல் (அதிகாரம்/செல்வாக்கு மற்றும் ஆர்வம்)

வினைத்திறனான பரப்புரையாற்றல் என்பது பிரச்சினையில் செல்வாக்கு செலுத்தும் ஆற்றலைக் கொண்ட முக்கிய பங்குதாரர்களைப் புரிந்துகொள்வதையும் ஈடுபடுத்துவதையும் சார்ந்துள்ளது. பங்குதாரர்களில் அரசாங்க உத்தியோகத்தர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சிவில் சமூகக் குழுக்கள், ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் உள்ளடங்குவர். **பரப்புரை திட்டமிடல் சக்கரமானது**, பிரச்சினையின் மீதான பங்குதாரர்களின் அதிகாரம் அல்லது செல்வாக்கு மற்றும் விளைவுகளில் **அவர்களின் ஆர்வத்தின் அளவு** ஆகியவற்றின் அடிப்படையில் வரைபடமாக்கல் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

**அதிகமான அதிகாரம் மற்றும் அதிகமான ஆர்வம்** கொண்ட பங்குதாரர்கள் பொதுவாக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய முக்கிய தரப்பினராவர். இதில் சட்டமியற்றுபவர்கள் அல்லது செல்வாக்கு மிக்க சிவில் சமூகத்

தலைவர்கள் இருக்கலாம். பங்குதாரர்களை வரைபடமாக்கல், HRDகளை வெவ்வேறு பார்வையாளர்களுக்கு தங்களின் பரப்புரையாற்றல் முயற்சிகளை மூலோபாயமாக வடிவமைக்க அனுமதிப்பதுடன், செய்திகள், தந்திரோபாயங்கள் மற்றும் அணுகுமுறைகள் ஒவ்வொரு குழுவிற்கும் பொருத்தமானவை என்பதை உறுதிப்படுத்துகிறது. பிரச்சினை தொடர்பாக அதிகமான அதிகாரம் மற்றும் ஆர்வத்தை யார் வைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது, பரப்புரையாற்றல் முயற்சிகள் நன்கு இலக்கு வைக்கப்பட்டிருப்பதையும், வெற்றிக்கான அதிக வாய்ப்பைக் கொண்டிருப்பதையும் உறுதி செய்கின்றது.

## 4. உத்திகளை விருத்தி செய்தல், தந்திரோபாயங்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் செய்தி அனுப்புதல்

பங்குதாரர்களை அடையாளம் கண்ட பிறகு, அடுத்த கட்டம் உத்திகளை உருவாக்குவதும், பரப்புரை இலக்குகளை அடைவதற்கான தந்திரோபாயங்களைத் தேர்ந்தெடுப்பதுமாகும். உத்திகள் என்பது பரப்புரை பிரச்சாரம் அதன் குறிக்கோள்களை நோக்கி எவ்வாறு செயற்படும் என்பதற்கான **பரந்த திட்டங்களாகும்**, அதே சமயம் **தந்திரோபாயங்கள்** அந்த உத்திகளைச் செயற்படுத்தப் பயன்படுத்தப்படும் குறிப்பான செயல்களாகும்.

சில பொதுவான பரப்புரை தந்திரோபாயங்கள் பின்வருமாறு:

- **பேச்சு வார்த்தை:** சட்டத்தில் செல்வாக்கு செலுத்த சட்டமியற்றுபவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடனான நேரடி ஈடுபாடு.
- **ஊடக ஈடுபாடு:** பொது விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தீர்மானமெடுப்பவர்கள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கவும் பாரம்பரிய மற்றும் சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்துதல்.
- **பொது பிரச்சாரங்கள்:** பேரணிகள், மனுக்கள் அல்லது பொது விழிப்புணர்வு முயற்சிகளை ஏற்பாடு செய்தல்.
- **சமுதாய அடைவு:** களமட்ட ஆதரவைத் திரட்ட உள்ளூர் சமுதாயங்களை ஈடுபடுத்துதல்.

இந்த கட்டத்தில், **செய்தி அனுப்புவதும்** முக்கியமானது. மனித உரிமை பாதுகாவலர்கள் ஒவ்வொரு பார்வையாளர்களுக்கும் ஏற்றவாறு தெளிவான, சுருக்கமான மற்றும் அழுத்தமான செய்திகளை உருவாக்க வேண்டும். வினைத்திறனான செய்தியிடல் பிரச்சினையின் அவசரத்தை தெரிவிப்பதுடன், செயற்படுத்தக்கூடிய தீர்வுகளை அளிக்கின்ற அதே நேரத்தில் இலக்கு பங்குதாரர்களின் விழுமியங்கள் மற்றும் நலன்களுடன் ஒத்துப்போகிறது. உதாரணமாக, நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய பரப்புரையாற்றும் போது, மனித உரிமை பாதுகாவலர்கள் இணைய

சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே நேரத்தில் தேசிய பாதுகாப்பு மற்றும் தனிநபர் உரிமைகள் இரண்டையும் பாதுகாக்கும் சட்டச் சீர்திருத்தங்களை முன்மொழிய வேண்டும்.

பரப்புரை திட்டமிடல் சக்கரமானது, மனித உரிமை பாதுகாவலர்கள் தங்களது பணியை ஓர் முறையான வழியில் அணுகுவதை உறுதிசெய்வதுடன், இந்த செயன்முறையை மூலோபாயமாக மற்றும் செயற்படுத்தக்கூடிய படிகளாக உடைப்பதன் மூலம் அதனை மிகவும் வினைத்திறனுள்ளதாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் ஆக்குகின்றது.

## செயன்முறை பயிற்சி: அடிப்படை பரப்புரை திட்டத்தை உருவாக்குதல்

பங்கேற்பாளர்கள் தங்களது பணிக்கு தொடர்புடைய ஒரு பிரச்சினையில் ஓர் அடிப்படை பரப்புரை திட்டத்தை கூட்டாக உருவாக்குவார்கள்.


## அத்தியாயம் 4:

# பரப்புரையாற்றல் உத்திகள் மற்றும் கருவிகள்

**குறிக்கோள்:**

- வினைத்திறனான பரப்புரையாற்றலுக்கு மனித உரிமை பாதுகாவலர்கள் பயன்படுத்தக்கூடிய செயன்முறைக் கருவிகள் மற்றும் முறைமைகளை ஆராய்தல்.

**பங்குதாரர்களை அடையாளம் கண்டு உறவுகளை கட்டியெழுப்புதல்**



வினைத்திறனான பரப்புரையாற்றல் என்பது கையிலுள்ள பிரச்சினையை பாதிக்கும் அதிகாரம் உள்ள பங்குதாரர்களை அடையாளம் காண்பதில் ஆரம்பிக்கின்றது. பங்குதாரர்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புகள், சமூகத் தலைவர்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் போன்ற பரந்த அளவிலான தனிநபர்கள் மற்றும் குழுக்களை உள்ளடக்க முடியும். இந்த பங்குதாரர்கள் அடையாளம் காணப்பட்டவுடன், அவர்களின் செல்வாக்கு நிலை மற்றும் பிரச்சினையில் அவர்களின் ஆர்வம் ஆகிய இரண்டையும் மதிப்பிடுவது முக்கியமானது.

பங்குதாரர்களின் அதிகாரம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் வரைபடமாக்குவது மனித உரிமை பாதுகாவலர்கள் அவர்களின் பரப்புரை முயற்சிகளை மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் நபர்கள் மற்றும் குழுக்களின் மீது கவனம் செலுத்த உதவுகிறது. இந்த மூலோபாய இலக்கு வைப்பு, பரப்புரை முயற்சிகள் மாற்றத்தை கொண்டு வர வாய்ப்புள்ளவர்களை நோக்கி செலுத்தப்படுவதை உறுதி செய்கின்றது. இந்த பங்குதாரர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்குவது சம அளவில் முக்கியத்துவமானது. பரப்புரையாற்றல் பெரும்பாலும் ஏற்கனவே உள்ள அமைப்புகளுக்குள் செயற்படுகிறது, அதாவது உரையாடல், பேச்சுவார்த்தை (Lobbing) மற்றும் ஒத்துழைப்பு மூலம் தீர்மானமெடுப்பவர்களை ஈடுபடுத்துகிறது.

இந்த உறவுகளை உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் பரஸ்பர மரியாதை, நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அடித்தளம் தேவைப்படுகிறது. தீர்மானமெடுக்கும் செயற்பாட்டில் ஒவ்வொரு பங்குதாரரின் வகிபங்கையும் மற்றும் மனித உரிமைகள் இலக்குகளை முன்னேற்றுவதற்கு அவர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதையும் மனித உரிமை பாதுகாவலர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மனித உரிமை பாதுகாவலர்கள் நீண்டகால பங்காண்மைகளை உருவாக்குவதன் மூலம், தங்களது பரப்புரையாற்றல் முயற்சிகளைப் பெருக்கும் சக்திவாய்ந்த கூட்டணிகளை உருவாக்க முடியும்.

## பேச்சுவார்த்தை (Lobbing), ஊடக ஈடுபாடு மற்றும் வலையமைப்பு

**பேச்சுவார்த்தை (Lobbing)** என்பது குறிப்பான மனித உரிமைகள் பிரச்சினைகளில் அவர்களின் நிலைப்பாட்டில் செல்வாக்கு செலுத்துவதற்காக கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தீர்மானம் மேற்கொள்பவர்களுடன் நேரடியாக, குறித்த நோக்கத்துடன் தொடர்பு கொள்வதாகும். இந்த பரப்புரை தந்திரோபாயமானது மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் பொதுக் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கியமானதாகும். பேச்சுவார்த்தையானது (Lobbing) முறைசார் கூட்டங்கள்,

விளக்கக்காட்சிகள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசாங்க உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்ட மனுக்கள் உட்பட பல்வேறு வடிவங்களை எடுக்கலாம். பேச்சுவார்த்தையின் (Lobbing) இலக்கானது, சட்டங்களைத் திருத்துவது அல்லது புதிய மனித உரிமைப் பாதுகாப்புகளை அறிமுகப்படுத்துவது என மனித உரிமை பாதுகாவலர்களின் குறிக்கோள்களுடன் ஒத்துப்போகும் கொள்கை மாற்றங்களைப் பாதுகாப்பதாகும்.

**ஊடக ஈடுபாடு** என்பது பரப்புரையாற்றுவதில் மற்றொரு சக்திவாய்ந்த கருவியாகும். ஊடக நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலமாக மனித உரிமை பாதுகாவலர்கள் மனித உரிமைகள் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம், தீர்மானமெடுப்பவர்களுக்கு அழுத்தம் கொடுக்கலாம் என்பதுடன் பொதுக் கருத்தை வடிவமைக்கலாம். பரப்புரை பிரச்சாரங்கள் அவற்றின் காரணத்தை முன்னிலைப்படுத்தவும் பரந்த பார்வையாளர்களை அடையவும் ஊடக வெளியீடுகள், நேர்காணல்கள், கட்டுரைகள் மற்றும் கருத்துப்படிவங்களை பயன்படுத்தலாம். ஒரு பரப்புரை செய்தியைப் பரப்புவதற்கும், கொள்கை மாற்றங்களைத் தூண்டக்கூடியவர்களை அது சென்றடைவதை உறுதி செய்வதற்கும் ஊடக ஈடுபாடு அவசியமாகும்.

**வலையமைப்பு** என்பது பரப்புரையாற்றும் சமூகத்தில் ஒற்றுமையை உருவாக்குவதற்கும் வளங்களைப் பகிர்வதற்கும் முக்கியமானதாகும். மனித உரிமை பாதுகாவலர்கள் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக்கொள்வதற்கும், பரஸ்பர ஆதரவை வழங்குவதற்கும், அவர்களின் கூட்டு முயற்சிகளை வலுப்படுத்துவதற்குமென ஒத்த எண்ணம் கொண்ட நிறுவனங்கள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளை ஒன்றிணைக்க முடியும். வலையமைப்பு, ர்சுனுக்களை தங்களின் குரலை அதிகப்படுத்தி, அவர்களின் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்ற ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்க அனுமதிக்கிறது.

## பரப்புரையாற்றலுக்கான சமூக ஊடகங்கள்: நிகழ்நிலை தளங்களை அதிகப்படுத்துதல் (நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் இணைய சுதந்திரத்தில் கவனம் செலுத்துதல்).

**முகநூல், ட்விட்டர், யூடியூப் மற்றும் டிக்டோக்** போன்ற சமூக ஊடக தளங்கள் பரப்புரையாற்றுவதற்கு இன்றியமையாத கருவிகளாகிவிட்டதுடன், மனித உரிமை பாதுகாவலர்கள் பரந்த பார்வையாளர்களை விரைவாகவும் வினைத்திறனுடனும் சென்றடைய அனுமதிக்கிறது. இந்த தளங்கள் மனித உரிமை பாதுகாவலர்கள் தகவல்களைப் பரப்பவும், தங்களைப் பின்பற்றுபவர்களுடன் நேரடியாக ஈடுபடவும், மனித உரிமைக் காரணங்களுக்காக களமட்ட ஆதரவை அணிதிரட்டவும் உதவுகின்றன. இலங்கையில் **நிகழ்நிலை காப்புச் சட்டத்தின்** பின்னணியில்,

இணைய சுதந்திரம் மற்றும் டிஜிட்டல் உரிமைகளைப் பாதுகாப்பதில் சமூக ஊடக பரப்புரையாற்றல் முக்கிய பங்கு வகிக்கிறது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் நிகழ்நிலை கருத்து வெளிப்பாடு மீதான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதுடன், இது சமூக ஊடகங்களை பரப்புரை முயற்சிகளுக்கான போராட்டக்களமாக மாற்றுகிறது. மனித உரிமை பாதுகாவலர்கள் இந்த சட்டத்தின் தாக்கம் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டவும், பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட கதைகளைப் பகிரவும், சட்டச் சீர்திருத்தங்களுக்கு பொது அழுத்தத்தை உருவாக்குவதற்காக நிகழ்நிலை பிரச்சாரங்களை ஏற்பாடு செய்யவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தலாம். சமூக ஊடக பிரச்சாரங்கள் HRDக்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையேயான உரையாடலுக்கான தளத்தையும் வழங்குவதுடன், இணைய சுதந்திர பிரச்சினைகள் பற்றிய அதிகரித்த விழிப்புணர்வு மற்றும் ஒற்றுமையை வளர்க்கின்றன.

நிகழ்நிலை தளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதன் மூலம், ர்சுனுக்கள் நிகழ்நிலை காப்புச் சட்டத்தால் ஏற்படும் சவால்களை வழிநடாத்தும் அதே வேளையில் தங்களது அடைவு எல்லை மற்றும் செல்வாக்கை அதிகரிக்கச் செய்யலாம்.

## பரப்புரை விடயங்களை விருத்தி செய்தல்: அறிக்கைகள், தகவல் வரைபடங்கள் மற்றும் காணொளிகள்

சிக்கலான மனித உரிமைகள் பிரச்சினைகளை தெளிவான மற்றும் வலியுறுத்தும் வகையில் தெரிவிப்பதற்கு உயர்தரமான பரப்புரை விடயங்கள் அவசியமாகும். பார்வையாளர்கள் மற்றும் செய்தியைப் பொறுத்து வெவ்வேறு வகையான பரப்புரை விடயங்கள் வெவ்வேறு நோக்கங்களுக்கு சேவையாற்றுகின்றன.

- **அறிக்கைகள்** ஆழமான பகுப்பாய்வு, தரவு மற்றும் குறிப்பான மனித உரிமைகள் தொடர்பான பரிந்துரைகளை வழங்குகின்றன. அவை கொள்கை மாற்றத்தை ஏற்படுத்த விரிவான தகவல் தேவைப்படும் கொள்கை வகுப்பாளர்கள், வல்லுநர்கள் மற்றும் தீர்மானமெடுப்பவர்களை ஈடுபடுத்துவதற்கு அவசியமாகும். அறிக்கைகள் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, ஆதாரம் சார்ந்ததாக இருக்க வேண்டியதுடன், இது பிரச்சினை பற்றிய விரிவான பார்வையை வழங்க வேண்டும்.
- **தகவல் வரைபடங்கள்** சிக்கலான தரவை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய காட்சி வடிவங்களாக மாற்றுகிறது. அவை விரைவான, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தகவல்தொடர்பாடல் தேவைப்படும் பொது விழிப்புணர்வு பிரச்சாரங்களில் குறிப்பாக வினைத்திறனானதாக காணப்படும். தகவல் வரைபடங்கள் தரவைச்

சுருக்கவும், முக்கிய உண்மைகளை முன்னிலைப்படுத்தவும் மற்றும் சிக்கலான பிரச்சினைகளை பொதுவான பார்வையாளர்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றவும் முடியும்.

- **காணொளிகள்** கதை சொல்லலுக்கான சக்திவாய்ந்த ஊடகத்தை வழங்குவதுடன், மனித உரிமைகள் பரப்புரையின் உணர்ச்சி மற்றும் மனித பரிமாணங்களைக் உள்ளடக்குகின்றன. காணொளிகள் சாட்சியங்கள், சம்பவ ஆய்வுகள் அல்லது மனித உரிமை மீறல்களின் காட்சிப் பிரதிநிதித்துவங்கள் மூலம், அனுதாபத்தை உருவாக்கலாம், விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் மற்றும் செயற்பாட்டை ஊக்குவிக்கலாம். அவை காட்சி உள்ளடக்கம் அதிக கவனத்தை ஈர்க்கும் சமூக ஊடக தளங்களில் குறிப்பாக வினைத்திறனானதாக இருக்கும்.

இந்த பரப்புரை விடயங்கள் அறிவூட்டல் மற்றும் கல்விக்கு உதவுவது மட்டுமல்லாமல், தனிநபர்களையும் நிறுவனங்களையும் நடவடிக்கை எடுப்பதற்கு தூண்டுகிறது. அறிக்கைகள், தகவல் வரைபடங்கள் மற்றும் காணொளிகளின் இணைந்தகலவையைப் பயன்படுத்துவதன் மூலம், மனித உரிமை பாதுகாவலர்கள் பலதரப்பட்ட பார்வையாளர்களை ஈடுபடுத்தலாம் என்பதுடன் தங்களின் பிரச்சாரங்களின் தாக்கத்தை அதிகரிக்கலாம்.

## செயன்முறைப் பயிற்சி

### எளிதான செய்தி உருவாக்கத்திற்கான தொழில்நுட்பங்கள்

### ஸ்ரீமல் DC

உள்ளடக்க உருவாக்கம் என்பது வலைப்பதிவுகள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற டிஜிட்டல் தளங்கள் வழியாக பகிரப்பட வேண்டிய காட்சிகள், காணொளிகள், ஆக்கங்கள் அல்லது தகவல் வரைபடங்கள் ஆகியவற்றை உருவாக்கும் செயன்முறையாகும். இந்த படைப்புகள் இலக்கு பார்வையாளர்களுக்கு அறிவுறுத்த, பொழுதுபோக்கு நோக்கு அல்லது ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஸ்மார்ட் தொலைபேசியைப் பயன்படுத்தி உயர்தரமான உள்ளடக்கத்தை தொழில்முறை ரீதியாகவும், இலகுவாகவும், செலவு குறைந்ததாகவும் உருவாக்க முடியும். இது சமூக ஊடகங்கள் மூலம் இலக்கு பார்வையாளர்களுடன் தடையின்றி பகிரப்படலாம்.

உள்ளடக்கத்தை உருவாக்கும் போது, இலக்கு பார்வையாளர்களையும் உள்ளடக்கத்தின் நோக்கத்தையும் அடையாளம் காண்பது அவசியமாகும். வடிவமைப்பு மற்றும் உருவாக்கும் செயன்முறை அந்த நோக்கத்துடன் ஒத்துப்போக வேண்டும்.

## ஸ்மார்ட் தொலைபேசியைப் பயன்படுத்தி காணொளிகளை பதிவு செய்வதற்கு முன்பாக கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயங்கள்

1. **ஸ்மார்ட் தொலைபேசியை தயார் செய்தல்**
   - **சேமிப்பிடத்தைக் காலியாக்குதல்:** பதிவுசெய்யப்பட்ட காணொளிகளைச் சேமிப்பதற்கு போதுமான சேமிப்பிடம் இருப்பதை உறுதிசெய்யவும்.
   - **மின்கலம் சரிபார்ப்பு:** தொலைபேசி முழுவதுமாக மின்னேற்றம் செய்யப்பட்டுள்ளதா அல்லது பவர் பேங்க் தயாராக உள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும்.
   - **செயலிகளைப் புதுப்பித்தல்:** கேமரா மற்றும் படத்தொகுப்பு செயலிகளைப் புதுப்பிக்கவும்.

2. **தரமான காணொளிகளை உருவாக்குதல்**
   - **Resolution:** காமெரா செயலிகளில் 1080p போன்ற உயர் தெளிவுத்திறனைப் பேணவும்.
   - **Frame rate:** சீரான காணொளிகளுக்கு FPS (வினாடிக்கான பிரேம்கள்) 30 ஆக அமைக்கவும்.

### காணொளி தொகுப்பு செயலிகள் மற்றும் நுட்பங்கள்

**CapCut, KineMaster** மற்றும் **InShot** போன்ற பல்வேறு செயலிகள் காணொளி தொகுப்பிற்காக உள்ளடக்க உருவாக்குபவர்களிடையே பிரபலமாக உள்ளன. செயலியின் தெரிவு வேறுபட்டாலும், அடிப்படை செயன்முறைகள் ஒரே மாதிரியாக இருக்கும்:

### காணொளி தொகுப்பில் பொதுவான அம்சங்கள்

1. **காலவரிசை:**

படத்தொகுப்பு மென்பொருளில் காலவரிசை முக்கிய அம்சமாகும். இது உங்களை காணொளிகள், ஒலிப்பதிவு, புகைப்படங்கள் மற்றும் பிற கூறுகளை ஒரே நேரியல் பார்வையில் ஒழுங்கமைக்கவும் திருத்தவும் அனுமதிக்கிறது.

2. **Transitions:**

Transitions என்பது ஒரு காட்சியிலிருந்து மற்றொரு காட்சிக்கு சீராகச் செல்லப் பயன்படும் காட்சி விளைவுகளாகும். அவை காணொளியின் ஓட்டத்தை மேம்படுத்துவதுடன், பார்வையாளரை வழிநடத்தி நேரம், இடம் அல்லது மனநிலையில் மாற்றங்களை வலியுறுத்துகின்றன.

3. **Import:**

காணொளி, ஒலி, படங்கள் அல்லது பிற கோப்புகளை படத்தொகுப்பு மென்பொருளில் கொண்டு வரும் செயன்முறை Import என்று அழைக்கப்படுகிறது. இது காணொளி தொகுப்பில் முதல் படிநிலையாகும்.

4. **Export:**

படத்தொகுப்பு செய்த பிறகு, காணொளியை ஒரு தனியான கோப்பாகச் சேமித்து, அதை செயற்படுத்தலாம் மற்றும் பகிரலாம் என்பது நுஒிழசவ எனப்படும்.

5. **உரைப்பகுதியைச் சேர்த்தல்:**

காணொளிகளில் உரைப்பகுதியைச் சேர்ப்பது சூழல், தலைப்புகள் அல்லது முக்கிய விடயங்களை முன்னிலைப்படுத்த உதவுகிறது.

**பிரபலமான செயலிகளைப் பயன்படுத்தி உரைப்பகுதியைச் சேர்த்தல்**

**CapCut**

1. காணொளி நேரவரிசையைத் தட்டி, "உரைப்பகுதி" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
2. "உரைப்பகுதியைச் சேர்" என்பதைக் கிளிக் செய்து, உங்களது வார்த்தைகளைத் தட்டச்சு செய்யவும்.
3. எழுத்துரு, அளவு மற்றும் வண்ணத்தைத் தனிப்பயனாக்கம் செய்யவும்.
4. உரைப் பெட்டியை விரும்பிய நிலைக்கு இழுத்து அதன் கால அளவை மாற்றியமைக்கவும்.

**InShot**

1. உங்களது காணொளியை Import செய்து "உரைப்பகுதி" என்பதைத் தட்டவும்.
2. உரையைச் சேர்த்து தட்டச்சு செய்யவும்.
3. எழுத்துரு, நிறம் மற்றும் விளைவுகளைத் தனிப்பயனாக்கவும்.
4. டைம்லைனில் இழுத்து உரையின் கால அளவை மாற்றியமைக்கவும்.

## KineMaster

1. “Layer” மற்றும் “உரைப்பகுதி” என்பதை கிளிக் செய்யவும்.
2. உங்கள் உரையைத் தட்டச்சு செய்து சரி என்பதைக் கிளிக் செய்யவும்.
3. அனிமேஷன்கள், வண்ணங்கள் மற்றும் பாணிகளுடன் உரையைத் தனிப்பயனாக்கம் செய்யவும்.
4. உரையை நிலைநிறுத்தி அதன் நேரத்தை டைம்லைனில் சரிசெய்யவும்.

**உரை ஒருங்கிணைப்புக்கான உதவிக்குறிப்புகள்**

- எளிய எழுத்துருக்கள் மற்றும் மாறுபட்ட வண்ணங்களைப் பயன்படுத்தவும்.
- திரையில் குழப்பத்தைத் தவிர்க்க வார்த்தைகளை மட்டுப்படுத்தவும்.
- முக்கியமான காட்சிகளை மறைக்காமல் அவதானமாக உரையை நிலைப்படுத்தவும்.
- காணொளியை மேலும் ஈர்க்கும் வகையில் அனிமேஷன்களைச் சேர்க்கவும்.

**தகவல் வரைபடம் என்றால் என்ன?**

தகவல் வரைபடம் என்பது படங்கள், விளக்கப்படங்கள், சின்னங்கள் மற்றும் குறைந்தபட்ச உரையைப் பயன்படுத்தி சிக்கலான தகவல்களை எளிமையான மற்றும் பார்வையை ஈர்க்கும் வகையில் வழங்கும் வடிவமைப்பாகும். புள்ளிவிவரங்கள், ஒப்பீடுகள், நேரவரிசைகள் மற்றும் பிற தரவுகளை பார்வைக்கு வெளிப்படுத்த தகவல் வரைபடம் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

## தகவல் வரைபடத்தின் நன்மைகள்

1. சிக்கலான தகவல்களை எளிமையாக்கி, புரிந்து கொள்ளவும் நினைவில் கொள்வதனையும் எளிதாக்குகிறது.
2. பார்வையாளர்களின் கவனத்தை, குறிப்பாக சமூக ஊடகங்களில் விரைவாக ஈர்க்கின்றது.
3. முக்கிய தகவல்களை ஒரே பார்வையில் புரிந்துகொள்ள பார்வையாளர்களை அனுமதித்து, நேரத்தை மிச்சப்படுத்துகிறது.

## வினைத்திறனான தகவல் வரைபடத்தை உருவாக்குவதற்கான உதவிக்குறிப்புகள்

1. **உங்களது பார்வையாளர்களை அறிந்து கொள்ளுங்கள்:**
உங்களது இலக்கு பார்வையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப நடை, மொழி மற்றும் உள்ளடக்கத்தை வடிவமைக்கவும்.
2. **தெளிவாகவும் சுருக்கமாகவும் இருக்கவும்:**
தகவலைப் புரிந்துகொள்வது இலகுவானது என்பதை உறுதிசெய்து, உரைப்பகுதி அல்லது படங்களுடனான அதிக சுமைகளைத் தவிர்க்கவும்.
3. **துல்லியத்தை சரிபார்க்கவும்:**
நம்பகத்தன்மையை பேணுவதற்கு அனைத்து தரவுகளும் உண்மைகளும் துல்லியமானவை என்பதை உறுதிப்படுத்தவும்.
4. **நிலைத்தன்மையை பேணவும்:**
வடிவமைப்பு முழுவதும் சீரான வண்ணங்கள், எழுத்துருக்கள் மற்றும் காட்சி கூறுகளைப் பயன்படுத்தவும்.
5. **முக்கிய தகவல்களுக்கு முன்னுரிமை கொடுக்கவும்:**
பார்வையாளருக்கு வழிகாட்ட தலைப்புகள், தடித்த எழுத்திலான உரை அல்லது தர்க்க வரிசைமுறையைப் பயன்படுத்தவும்.
6. **வர்த்தக நாமத்துடன் இணங்கவும்:**
பொருத்தமானால், உங்களது வர்த்தக நாமத்தின் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் சின்னங்கள், வண்ணங்கள் மற்றும் வடிவமைப்பு கூறுகளைச் சேர்க்கவும்.

## தகவல் வரைபடத்தை உருவாக்குவதற்கான கருவிகள்

Canva, Adobe Spark மற்றும் Piktochart போன்ற பிரபலமான தொலைபேசி செயலிகள் தகவல் வரைபட உருவாக்கத்திற்கு பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த செயலிகளின் முக்கிய நன்மை பயனர்களை விரைவாக தகவல் வரைபடத்தை உருவாக்க அனுமதிக்கின்ற மாதிரி வார்ப்புருக்கள் கிடைப்பதாகும். இந்த வார்ப்புருக்கள் படைப்பாளரின் தேவைகளுக்கு ஏற்ப முழுமையாகத் தனிப்பயனாக்கப்படலாம்.

# அத்தியாயம் 5:

# பரப்புரையாற்றலில் அனர்த்த முகாமைத்துவம்

**குறிக்கோள்:**

- பங்கேற்பாளர்களுக்கு பரப்புரையாற்றலில் குறிப்பாக விரோதமான சூழலில் உள்ள அனர்த்தங்களை எவ்வாறு முகாமை செய்வது என்று கற்றுக்கொடுத்தல்.

## மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு அபாயங்களைப் புரிந்துகொள்ளுதல்

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் (HRDs) மற்றும் ஊடகவியலாளர்கள் பெரும்பாலும் மிகவும் கொந்தளிப்பான சூழல்களில், குறிப்பாக மனித உரிமை மீறல்கள் பரவலாக இருக்கும் மற்றும் கருத்து சுதந்திரம் நசுக்கப்படும் நாடுகளில் பாதுகாப்பு அபாயங்கள் அதிகமாக உள்ள சூழல்களில் செயற்படுகிறார்கள். இலங்கையில், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் **அச்சுறுத்தல்** மற்றும் **துன்புறுத்தல்** முதல் உடல்ரீதியான வன்முறை மற்றும் சட்டரீதியான விளைவுகள் வரை அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். இந்த அபாயங்கள் குறிப்பாக ஊழல், சித்திரவதை, பலவந்தமாக காணாமல் போதல் மற்றும் அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற உணர்வுப்பூர்வமான பிரச்சினைகளில் பணிபுரிபவர்களுக்கு அதிகமாகும்.

அரச தரப்பினர், அரசியல் குழுக்கள் மற்றும் பிற செல்வாக்கு மிக்க நிறுவனங்கள் பெரும்பாலும் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை இலக்கு வைக்கின்றன, ஏனெனில் அவர்களின் பணி துஷ்பிரயோகங்கள் அல்லது நிறுவப்பட்ட அதிகார அமைப்புகளுக்கு சவால்களை அம்பலப்படுத்துகிறது. இந்த எதிர்ப்பு, **கண்காணிப்பு, தன்னிச்சையான கைதுகள்** மற்றும் **உடல்ரீதியான தாக்குதல்கள்** உட்பட பல்வேறு வடிவங்களில் வெளிப்படும். இலங்கையில் சமீபத்திய நிகழ்நிலை காப்புச் சட்டமானது நிகழ்நிலை சுதந்திரத்தின் மீது புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளதுடன் டிஜிட்டல் கண்காணிப்பு அபாயத்தை அதிகரிப்பதாலும் தங்களது பரப்புரை பணிக்காக நிகழ்நிலை தளங்களைப் பயன்படுத்தும் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்வதாலும் நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது. எனவே மனித உரிமை பாதுகாவலர்கள், நீதி மற்றும் மனித

உரிமைகள் பாதுகாப்பைப் பின்தொடர்வதில், நிகழ்நிலையிலும் நேரடியாகவும், அதிகரித்தளவில் விரோதமான சூழலை வழிநடாத்த வேண்டியுள்ளது.

## அரசியல், சட்ட மற்றும் பாதுகாப்பு அபாயங்களைக் குறைத்தல்

மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் அபாயங்களைத் தணிக்க விரிவான திட்டமிடலும் வினைத்திறனான **அனர்த்த முகாமைத்துவ உத்திகளை** உருவாக்குவதும் அவசியமாகின்றது. அரசாங்கத்தின் **தலையீடு** அல்லது **ஆட்சி மாற்றங்களினால்** ஏற்படும் ஏற்ற இறக்கம் போன்ற அரசியல் அபாயங்கள், குறிப்பாக தேர்தல்கள் போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த காலங்களில் பரப்புரையாற்றும் முயற்சிகளை சீர்குலைக்கலாம். அரசியல் அபாயங்களைத் தணிப்பதற்கு, மனித உரிமை பாதுகாவலர்கள் அரச நிறுவனங்களுடன் **ஆக்கப்பூர்வமான உரையாடல்களில்** ஈடுபடுவதுடன், **சட்ட வல்லுநர்களுடன்** உறவுகளை உருவாக்க வேண்டும், மேலும் **சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன்** கூட்டணியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**நிகழ்நிலை காப்புச் சட்டம்** போன்ற கட்டுப்பாடான சட்டங்கள் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் நிகழ்நிலை பரப்புரையாக்கலை குற்றமாக்குகையில் **சட்ட அபாயங்கள்** எழுகின்றன. மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் இந்தச் சட்டங்களைப் பாதுகாப்பாக வழி நடாத்திச் செல்லவும் சாத்தியமான சட்டரீதியான விளைவுகளைத் தவிர்க்கவும் அவற்றை நன்கு அறிந்திருக்க வேண்டும். சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் அதே வேளையில், சட்ட **ஆலோசனையைப்** பெறுவதும், பரப்புரை நடவடிக்கைகள் உள்ளூர் சட்டங்களுக்கு இணங்குவதை உறுதி செய்வதும் முக்கியமானதாகும்.

வன்முறை அச்சுறுத்தல்கள், **துன்புறுத்தல்** மற்றும் **உடல்ரீதியான தாக்குதல்கள்** உள்ளிட்ட **பாதுகாப்பு அபாயங்கள்**, தனிநபர் பாதுகாப்புப் பயிற்சியின் மூலமாக தணிக்கப்படலாம். ஆபத்தான சூழ்நிலைகளின் போது பாதுகாப்பான பாதையை எவ்வாறு பேணுவது உட்பட அவசரகால பதிலளிப்பு நெறிமுறைகள் தொடர்பில் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மேலதிகமாக, வெளியேறுகை, சட்ட ஆதரவு மற்றும் மருத்துவ உதவிக்கான அவசரகால நடவடிக்கைகள் அடங்கிய வலுவான பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குவதால் சாத்தியமான பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் தாக்கத்தை கணிசமாகக் குறைக்க முடியும். பரப்புரையாற்றல் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மையைப் பேணுதல் மற்றும் ஊடகக் பங்காளர்களை வளர்ப்பது ஆகியவை வன்முறை அல்லது அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக பொதுப்பார்வை ஒரு தடுப்பாகச் செயற்படுவதால் இலக்கு வைக்கப்படுவதற்கான அபாயங்களைக் குறைக்க உதவும்.

## மனித உரிமை பாதுகாவலர்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பு: உணர்திறனான தகவல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பைப் பேணுதல்.

இன்று அதிகளவில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உலகில், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு குறிப்பாக **இணையவழித் தாக்குதல்கள்** மற்றும் **அரச கண்காணிப்பு** பொதுவாக இருக்கும் நாடுகளில் **டிஜிட்டல் பாதுகாப்பு** அவசியமாகும். தங்களை அல்லது அவர்களின் வலையமைப்புகளை தேவையற்ற ஆபத்துக்கு ஆளாக்காமல், அவர்களின் பரப்புரை பணியின் தொடர்ச்சியை உறுதிசெய்வதற்கு நிகழ்நிலை தளத்தில் முக்கியமான தகவல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பைப் பேணுவது மிகவும் முக்கியமானதாகும்.

மனித உரிமை பாதுகாவலர்கள் கண்காணிப்பில் இருந்து உரையாடல்களைப் பாதுகாக்க **பாதுகாக்கப்பட்ட செய்தியிடல் செயலிகளை** (உதா. சிக்னல், டெலிகிராம்) பயன்படுத்துதல் போன்ற பாதுகாப்பான தகவல் தொடர்பாடல் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். சாதனங்கள் **வலுவான கடவுச்சொற்களால்** பாதுகாக்கப்பட வேண்டியதுடன் **தீம்பொருள்** மற்றும் **ஹேக்கிங் முயற்சிகளிலிருந்து** பாதுகாக்க அனைத்து மென்பொருட்களும் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும். HRDக்கள் பாதுகாப்பற்ற அலைவரிசைகளில் முக்கியமான தகவல்களைப் பகிர்வதைத் தவிர்க்க வேண்டியதுடன் அவர்களின் டிஜிட்டல் தடயத்தைக் குறைப்பதற்காக சமூக ஊடகங்களில் தங்களது பொது சுயவிவரங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதைப் போன்ற உள்ளூர் **டிஜிட்டல் கண்காணிப்புச் சட்டங்களைப்** புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும். மனித உரிமை பாதுகாவலர்கள் தங்களது தனியுரிமையைப் பாதுகாக்கும் அதே வேளையில் தாம் இணங்கியிருப்பதை உறுதி செய்ய வேண்டும். சமூக ஊடக செயற்பாடு கவனமாக முகாமை செய்யப்பட வேண்டியதுடன், தனிப்பட்ட விவரங்கள் மற்றும் முக்கியமான தகவல்கள் கவனக்குறைவாக அம்பலப்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். இதற்கு மேலதிகமாக, மனித உரிமை பாதுகாவலர்கள் டிஜிட்டல் ரீதியான உடைவு ஏற்பட்டால் தரவு இழப்பிலிருந்து பாதுகாக்க, முக்கியமான ஆவணங்கள் மற்றும் தரவுகளின் பாதுகாப்பான காப்புப்பிரதிகளை பௌதீக ரீதியாகவும் இணையத்திலும் உருவாக்க வேண்டும்.

இறுதியாக, மனித உரிமை பாதுகாவலர்கள் பாதுகாப்பை மேலும் மேம்படுத்த அனைத்து நிகழ்நிலை கணக்குகளிலும் இரு நிலை அங்கீகாரம் (2FA) போன்ற சிறந்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். மனித உரிமை பாதுகாவலர்களுக்கு டிஜிட்டல் பாதுகாப்பு நெறிமுறைகளில் பயிற்சி அவசியமானதுடன், இவை நிகழ்நிலை தாக்குதல்களின் சாத்தியக்கூறுகளைக் குறைக்கவும், அவர்களின் தகவல் தொடர்பாடல் மற்றும் தரவுகளின் இரகசியத்தன்மையைப் பேணுவதன் மூலம் அவர்களின் பணியைத் தொடரவும் உதவுகிறது.

# அத்தியாயம் 6:

# பரப்புரையாற்றலில் பால்நிலை உணர்திறன்

**குறிக்கோள்:**

- **மனித உரிமைகள் பரப்புரையாற்றலில் பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களைப் புரிந்துகொண்டு, இந்த சவால்களை எதிர்கொள்ள பால்நிலை உணர்திறனான உத்திகளை உருவாக்குதல்.**

## பரப்புரையாற்றுவதில் பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் குறிப்பான சவால்கள்.

பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர் பெரும்பாலும் மனித உரிமைகளின் பரப்புரையாற்றலில் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த சவால்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தல் முதல் பௌதீக மற்றும் டிஜிட்டல் தளங்களில் முறைப்படுத்தப்பட்ட பாகுபாடு வரை இருக்கலாம். இந்தக் குழுக்களைச் சேர்ந்த மனித உரிமை பாதுகாவலர்கள் அவர்களின் பால்நிலை, பாலியல் நோக்குநிலை அல்லது பால்நிலை அடையாளம் ஆகியவற்றின் காரணமாக இலக்கு வைக்கப்பட்ட அச்சுறுத்தல்களை அனுபவிக்கும் வாய்ப்புகள் அதிகமாகும்.

### 1. துன்புறுத்தல் மற்றும் வன்முறை

பரப்புரையாற்றலில் உள்ள பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர் நிகழ்நிலையிலும் நேரடியாகவும் பாராபட்சமாக துன்புறுத்தலுக்கு இலக்காகிறார்கள். உடலியல் ரீதியான வன்முறை, பாலியல் துன்புறுத்தல், மிரட்டல் மற்றும் பாலியல் வன்புணர்வு அச்சுறுத்தல்கள் ஆகியவை பாதுகாப்பாக பரப்புரையாற்றும் திறனை பாதிக்கின்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் பொதுவான வடிவங்களாகும். இந்த வன்முறை வடிவங்கள் HRDக்களை அமைதிப்படுத்துவதையும் அச்சுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், இதனால் அவர்கள் தங்களது பணியை தொடர்வதை கடினமாக்குகிறது.

**2. டிஜிட்டல் அச்சுறுத்தல்கள் மற்றும் தவறான தகவல்**

பால்நிலை சிறுபான்மையினர் மற்றும் பெண்கள் டிஜிட்டல் அச்சுறுத்தல்களால் குறிப்பாக பாதிக்கப்படுகின்றனர். நிகழ்நிலை துன்புறுத்தல், இணையக்கேலி மற்றும் doxxing (தனிப்பட்ட தகவல்களை நிகழ்நிலையில் வெளியிடுதல்) ஆகியவை பெண்கள் மற்றும் LGBTQ+ HRDக்களை பாராபட்சமான விதத்தல் பாதிக்கிறது. கறைபடுத்தும் டிஜிட்டல் பிரச்சாரங்கள் பெரும்பாலும் பால்நிலை சிறுபான்மையினரை குறிவைத்து அவர்களின் பணியை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் அல்லது அவர்களின் அடையாளங்கள் அல்லது பரப்புரை முயற்சிகள் குறித்து தீங்கு விளைவிக்கும் தவறான தகவல்களை பரப்புகின்றன.

**3. சட்ட கட்டமைப்புகள் மற்றும் பாகுபாடு**

பால்நிலை சிறுபான்மையினரும் பெண்களும் சட்டக் கட்டமைப்பில் பொதிந்துள்ள அவர்களை ஓரங்கட்டுகின்ற அல்லது அவர்களுக்கு சமமான பாதுகாப்பை மறுக்கின்ற நிறுவனத் தடைகளை எதிர்கொள்கின்றனர். சட்டரீதியான பாகுபாடுகள் மற்றும் சட்டத்தின் கீழ் போதிய பாதுகாப்பு இல்லாததால், இந்த ர்சுனுக்கள் இலக்கு வைக்கப்படும்போது நீதியைப் பெறுவது கடினமாகின்றது. மேலும், நிகழ்நிலை பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கை நிவர்த்தி செய்வது போன்ற சட்டங்கள் பால்நிலை சிறுபான்மையினரின் மேலதிகமான பாதிப்புகளைக் கணக்கிடத் தவறிவிடுகின்றன.

## பரப்புரையாற்றல் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்தில் பால்நிலை உணர்திறனான அணுகுமுறைகள்.

இந்த குறிப்பான சவால்களை எதிர்கொள்வதற்கு, பால்நிறை உணர்திறனான அணுகுமுறைகளை அனைத்து நிலை பரப்புரை மற்றும் அனர்த்த முகாமைத்துவத்திலும் இணைப்பது மிகவும் முக்கியமானதாகும்.

**1. பரப்புரை பிரச்சாரங்களில் பால்நிலை உணர்திறனை ஒருங்கிணைத்தல்**

பரப்புரை திட்டங்கள் பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினரின் பல்வேறு தேவைகளையும் பாதிப்புகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். மனித உரிமை பாதுகாவலர்கள் உள்ளடங்கலான மொழியைப் பயன்படுத்துவதன் மூலமும், பால்நிலை சிறுபான்மையினரின் குரல்களை அதிகப்படுத்துவதன் மூலமும், இந்தத் தனிநபர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு பாதுகாப்பான தளங்களை உருவாக்குவதன் மூலமும் பால்நிலை உணர்திறனான பரப்புரையாற்றலை உறுதிப்படுத்த முடியும். பரப்புரையாற்றல் உத்திகள் பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினரின் குறிப்பாக டிஜிட்டல் பாதுகாப்பு, இனவிருத்தி ஆரோக்கியம் மற்றும் பால்நிலை

அடிப்படையிலான வன்முறையிலிருந்து பாதுகாப்பு போன்ற துறைகளில் உள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குறிப்பான அழைப்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**2. பால்நிலை சார் பாதிப்புகளுக்கு ஏற்புடைய அனர்த்த முகாமைத்துவம்**

அனர்த்த முகாமைத்துவ உத்திகளை உருவாக்கும் போது, பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பால்நிலை குறிப்பான அபாயங்களை நிவர்த்தி செய்வது மிகவும் முக்கியமானதாகும். இந்த உத்திகள் பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்:

- **தனிநபர் பாதுகாப்பு:** பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர் பெரும்பாலும் பொது இடங்களில் தனித்துவமான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். அனர்த்த முகாமைத்துவ நெறிமுறைகள் பெண் மனித உரிமை பாதுகாவலர்களுக்கான பாதுகாப்பான போக்குவரத்து தெரிவுகளை உள்ளடக்கியிருக்க வேண்டியதுடன் பால்நிலை அடிப்படையிலான அச்சுறுத்தல்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்த பயிற்சியை அவர்களுக்கு வழங்க வேண்டும்.
- **டிஜிட்டல் பாதுகாப்பு:** பால்நிலை சிறுபான்மையினர் மற்றும் பெண்கள் நிகழ்நிலை துன்புறுத்தலால் இலக்கு வைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதால், அவர்கள் மேம்பட்ட டிஜிட்டல் பாதுகாப்பு நுட்பங்களில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இதில் பாதுகாக்கப்பட்ட தகவல்தொடர்பாடல் கருவிகளின் பயன்பாடு, சமூக ஊடகங்களில் வலுவான தனியுரிமை முறைமைகள் மற்றும் னழஒஒைபெ மற்றும் இணையவழி தாக்குதல்களில் இருந்து அவர்களின் டிஜிட்டல் அடையாளங்களைப் பாதுகாப்பதற்கான முறைமைகள் ஆகியவை உள்ளடங்கும்.
- **சட்டப் பாதுகாப்புகள்:** சட்ட பரப்புரையானது பால்நிலை சிறுபான்மையினர் மற்றும் பெண்களைப் பாதுகாக்கும் சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுப்பதிலும், பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் பாகுபாட்டிற்கு எதிராக வலுவான சட்டங்களுக்காக பரப்புரையாற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும். பால்நிலை உணர்திறனான அனர்த்த முகாமைத்துவம் என்பது சட்ட இடைவெளிகளைப் புரிந்துகொள்வதுடன் அவசியமான நேரங்களில் சட்டரீதியான ஆதரவை அணுகுவதற்கு வளங்கள் மற்றும் தொடர்புகளுடன் மனித உரிமை பாதுகாவலர்களை வழங்குவதை உள்ளடக்குகிறது.

## சம்பவ ஆய்வுகள் மற்றும் உதாரணங்கள்

### 1. சம்பவ ஆய்வு: இலங்கையில் பெண் ஊடகவியலாளர் ஒருவருக்கு டிஜிட்டல் துன்புறுத்தல்

இலங்கையில் அதிகமான ஊடக சுதந்திரம் வேண்டும் என்று பரப்புரையாற்றிய ஒரு பிரபல பெண் ஊடகவியலாளர், அரசு வழிநடாத்தும் துஷ்பிரயோகங்கள் குறித்து அறிக்கையளித்ததையடுத்து, இணையவழி தாக்குதல்கள் மற்றும் துன்புறுத்தலுக்கு இலக்கானார். நிகழ்நிலை கேலிகள் அவரது சமூக ஊடக கணக்குகளை பாலியல் மற்றும் தவறான கருத்துகளால் தாக்கியதுடன், தனிப்பட்ட அச்சுறுத்தல்களை விடுத்து ஓர் ஊடகவியலாளராக அவரது நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியது. தாக்குதல்களில் அவரது கணக்குகளை ஹேக் செய்யும் முயற்சிகள் மற்றும் அவரது தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய தவறான தகவல்களை பரப்பும் அவதூறு பிரச்சாரங்களும் உள்ளடங்கியிருந்தன.

- **பதிலளிப்பு:** ஊடகவியலாளர் பாதுகாக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தியதுடன் தனது நிகழ்நிலை பாதுகாப்பை வலுப்படுத்த டிஜிட்டல் உரிமை அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றினார். மேலதிகமாக, ஊடகத் துறையில் பால்நிலை அடிப்படையிலான நிகழ்நிலை துன்புறுத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளூர் பரப்புரை குழுக்களுடன் கூட்டு சேர்ந்தார். இலங்கையில் பெண் மனித உரிமை பாதுகாவலர்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் அவசியத்தைப் பற்றிய அவரது பரப்புரைகள் அதிக பொதுப் பேச்சுக்கு வழிவகுத்தது.

**அத்தியாயம் 7:**

# காலநிலை மாற்றமும் மனித உரிமைகளின் பரப்புரையாற்றலும்

**குறிக்கோள்:**

- **காலநிலை மாற்றம் மற்றும் மனித உரிமைகளுக்கு இடையிலான உறவைப் புரிந்து கொள்வதுடன், காலநிலை மாற்றம் எவ்வாறு நலிவடைந்த மக்களைப் பாதிக்கிறது என்பதை ஆராய்தல். மனித உரிமைப் பணியில் சுற்றுச்சூழல் நீதியை உள்ளடக்கிய பரப்புரை உத்திகளை உருவாக்குதல்.**

## மனித உரிமைகள் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கம்

காலநிலை மாற்றம் என்பது சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்லாது, குறிப்பிடத்தக்க மனித உரிமைச் சவாலாகவும் உள்ளது. காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளான உயர்ந்த கடல் மட்டங்கள், தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் மாறிவரும் சுற்றுச்சூழல் அமைப்பு ஆகியன தனிநபர்களின், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் வாழ்வாதாரம், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை நேரடியாக அச்சுறுத்துகிறது. காலநிலையால் தூண்டப்பட்ட இடப்பெயர்வு, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கான அதிகரித்த வெளிப்பாடு ஆகியவை அடிப்படை மனித உரிமைகளான வாழ்க்கை, சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் சுத்தமான குடிநீருக்கான அணுகல் ஆகியவை சமரசம் செய்யப்படும் நிலைமைகளை ஏற்படுத்துகின்றன.

### 1. இடம்பெயர்தல் மற்றும் வீட்டுக்கான உரிமை

காலநிலை மாற்றம் மோசமடைவதால், பல சமூகங்கள், குறிப்பாக தாழ்வான கடலோரப் பகுதிகளில் அல்லது இயற்கை அனர்த்தங்களுக்கு ஆளாகக்கூடிய பகுதிகளில் வாழ்பவர்கள், இடப்பெயர்வை எதிர்கொள்கின்றனர். வெள்ளம், கடல் மட்ட உயர்வு மற்றும் வறட்சி காரணமாக வீடுகளை இழப்பது சமூகங்களை இடம்பெயரச் செய்வதுடன், நகர்ப்புறங்கள் மற்றும் அகதி முகாம்களில் நெரிசலான நிலைமைகளுக்கு வழிவகுக்கின்றது. இடம்பெயர்ந்தவர்கள் பாதுகாப்பான மற்றும்

செலவு குறைவான தங்குமிடத்தை பெற போராடுவதால், இந்த இடப்பெயர்வு பெரும்பாலும் போதியளவான வீடுகளுக்கான உரிமையை மீறுகிறது.

**2. குடிநீருக்கான அணுகல் மற்றும் ஆரோக்கியத்திற்கான உரிமை**

வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற தீவிர காலநிலை நிகழ்வுகள் சுத்தமான குடிநீருக்கான அணுகலை சீர்குலைத்து, பாதிக்கப்படக்கூடிய மக்களின் ஆரோக்கியத்தை ஆபத்தில் ஆழ்த்துகின்றது. ஏற்கனவே வறுமை அல்லது புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட சமுதாயங்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுவதுடன், காலநிலை மாற்றம் தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளை அதிகப்படுத்துகிறது. சுத்தமான குடிநீர் கிடைக்காததால் நீர் மூலமாக பரவுகின்ற நோய்களின் அபாயம் அதிகரிக்கின்ற அதே சமயம் நீர் ஆதாரங்களின் பற்றாக்குறை நீரின் உபயோகத்தில் முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும்.

**3. உணவுப் பாதுகாப்பு மற்றும் போதுமான வாழ்க்கைத் தரத்திற்கான உரிமை**

காலநிலை மாற்றம் விவசாய அமைப்புகளை சீர்குலைத்து, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் போதுமான வாழ்க்கைத் தரத்தை பராமரிக்க இயலாமைக்கு வழிவகுக்கின்றது. நீடித்த வறட்சி மற்றும் பருவம் தவறிய மழைவீழ்ச்சி போன்ற காலநிலை முறைகள் மாற்றமடைவது பயிர் விளைச்சலைக் குறைத்து உணவு கிடைப்பதைக் குறைக்கிறது. இது விவசாயிகள் மட்டுமல்லாது, உள்ளூர் விவசாயத்தை நம்பி வாழும் சமுதாயங்களையும் பாதிக்கிறது. இதன் விளைவாக ஏற்படும் உணவுப் பாதுகாப்பின்மையானது போசணைக் குறைபாடு மற்றும் பசிக்கு வழிவகுப்பதுடன், மேலும் இந்த மக்களின் மனித உரிமைகளை மேலும் கீழ்நிலைக்கு இட்டுச் செல்லும்.

## காலநிலை மாற்றத்தால் நலிவடையக்கூடிய குடித்தொகை

ஓரங்கட்டப்பட்ட இனக்குழுக்கள், பழங்குடி மக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட நலிவடையக்கூடிய மக்களை காலநிலை மாற்றம் பாராபட்சமாக பாதிக்கிறது. இந்த குழுக்கள் பெரும்பாலும் சுற்றுச்சூழல் மாற்றங்களால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளதுடன் காலநிலை தொடர்பான அதிர்ச்சிகளுக்கு ஏற்ப மாற்றமடைவதற்கு அல்லது மீள்வதற்கு குறைவான வளங்களையே கொண்டுள்ளன.

**1. பழங்குடி சமூகங்கள்**

பழங்குடி சமூகங்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்வாதாரத்திற்காக நிலத்தை நம்பியுள்ளதுடன், காலநிலை மாற்றம் அவர்களின் வாழ்க்கை முறைமைக்கு

நேரடி அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. உயரும் கடல் மட்டம், காடழிப்பு மற்றும் உயிர்ப்பல்வகைமையின் இழப்பு ஆகியவை பழங்குடி மக்கள் சார்ந்திருக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகளை சீரழிக்கிறது. இந்த சமூகங்களின் பாரம்பரிய நிலங்கள் வாழத் தகுதியற்றவையாகின்றதுடன், சுற்றுச்சூழலுடன் பிணைக்கப்பட்ட அவர்களின் கலாச்சார நடைமுறைகள் சீர்குலைக்கப்படுவதால் அவர்கள் சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார இழப்புகளை எதிர்கொள்கின்றனர்.

**2. பெண்கள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர்**

குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு, உணவு மற்றும் குடிநீர் போன்ற வீட்டு வளங்களை முகாமை செய்வதற்கான பொறுப்பு அதிகமாக உள்ளது. காலநிலை மாற்றம் இந்த வளங்களை குறைக்கும் போது, மேலதிக உழைப்பு மற்றும் சுகாதார அபாயங்களின் அடிப்படையில் பெண்கள் பாராபட்சமான அளவில் சுமைகளை சுமக்கிறார்கள். சமூக விழுமியங்கள் அல்லது பாரபட்சமான நடைமுறைகளின் அடிப்படையில் நிலம் மற்றும் நிவாரண உதவி போன்ற வளங்களுக்கான அணுகலும் மறுக்கப்படலாம் என்பதால், பால்நிலை சிறுபான்மையினர் கூடுதலான பாதிப்புகளை சந்திக்க நேரிடலாம்.

**3. குறைந்த வருமானம் கொண்ட சமூகங்கள்**

வறுமையால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் பெரும்பாலும் போதிய உட்கட்டமைப்பு இல்லாத பகுதிகளில் வாழ்கின்றமையால், அவர்கள் காலநிலை தொடர்பான அனர்த்தங்களுக்கு அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். முறையான வீடுகள், சுகாதாரம் அல்லது வளங்களுக்கான அணுகல் இல்லாமல், இந்த சமுதாயங்கள் சுற்றுச்சூழல் மாற்றங்களிலிருந்து மீண்டெழும் திறன் குறைவாக உள்ளது. காலநிலையால் தூண்டப்பட்ட இடப்பெயர்வு இந்த மக்களை பாராபட்சமாக பாதிக்கிறதுடன், இதனால் அவர்கள் சமூக சேவைகள் அல்லது சட்டப் பாதுகாப்புகளை அணுக முடியாத பகுதிகளுக்கு இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

## ஓர் மனித உரிமையாக சுற்றுச்சூழல் நீதிக்கான பரப்புரையாற்றல்

காலநிலை மாற்றத்தை வலியுறுத்துவது, பாதிக்கப்படக்கூடிய மக்களின் மனித உரிமைகளுடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது. **சுற்றுச்சூழல் நீதிக்காக** பரப்புரையாற்றுவது என்பது, பருவநிலை மாற்றத்தின் சுமை, அதற்கு குறைந்தபட்சமான அளவில் பொறுப்பானவர்கள் மீது பாராபட்சமாக விழாமல் இருப்பதை உறுதி செய்வதாகும். மனித உரிமைப் பாதுகாவலர்கள் (HRDs) காலநிலையின் மீண்டெழுதன்மையை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் அத்தியாயம் களை பாதுகாத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் உரிமைகளுக்கு

முன்னுரிமை அளிக்கும் கொள்கைகளுக்கு பரப்புரையாற்றுவதன் மூலமாக சுற்றுச்சூழல் நீதி தொடர்பில் வெளிப்படுத்த முடியும்.

**1. உதாரணம்: காலநிலையால் தூண்டப்பட்ட இடப்பெயர்வுக்கான பரப்புரை**

சர்வதேச சட்டத்தின் கீழ் காலநிலை அகதிகளை அங்கீகரிப்பதன் மூலமாக காலநிலையின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பரப்புரை பிரச்சாரங்கள் கவனம் செலுத்தலாம். HRDக்கள் இடம்பெயர்ந்த நபர்களின் பாதுகாப்பில் உள்ள சட்டரீதியான இடைவெளிகளை எடுத்துரைப்பதன் மூலமாக, சுற்றுச்சூழல் காரணிகளால் இடம்பெயர்ந்தவர்கள் போதுமான வீடுகள், சுகாதாரப் பாதுகாப்புக்கான அணுகல் மற்றும் அவர்கள் அடைக்கலம் புகுந்த நாடுகளில் சட்ட அங்கீகாரம் ஆகியவற்றைப் பெறுவதை உறுதிசெய்வதற்காக செயற்பட முடியும்.

**2. உதாரணம்: நிலைத்தன்மையான வள முகாமைத்துவத்திற்கான பிரச்சாரம்**

காலநிலை மாற்றம் காரணமாக நீர் ஆதாரங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பகுதிகளில், நிலைத்தன்மையான நீர் முகாமைத்துவ நடைமுறைகளை ஊக்குவிப்பதில் பரப்புரையாற்றல் கவனம் செலுத்த முடியும். மனித உரிமை பாதுகாவலர்கள் உள்ளூர் சமுதாயங்களுடன் ஒத்துழைத்து, ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கு சுத்தமான தண்ணீரை அணுகுவதற்கு முன்னுரிமை அளிக்கும் தீர்வுகளை உருவாக்க முடியுமென்பதுடன், பற்றாக்குறையின் போது கூட நீருக்கான மனித உரிமை மதிக்கப்படுவதை உறுதி செய்ய முடியும்.

**3. உதாரணம்: காலநிலை பொறுப்புக்கூறலுக்கான சட்ட ஆலோசனை**

HRDக்கள் காலநிலை மாற்றத்திற்கு பங்களிக்கும் செயற்பாடுகளுக்கு நிறுவனங்களையும் அரசாங்கங்களையும் பொறுப்பேற்க வைக்கும் வலுவான சட்ட கட்டமைப்பிற்காக பரப்புரையாற்ற முடியும். சட்ட பரப்புரையாற்றலானது காபன் உமிழ்வைக் குறைத்தல், பசுமை ஆற்றல் முன்முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றில் தொழிற்துறை பொறுப்புக்கூறலுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு ஈடுபடலாம்.

**4. கல்வி தொடர்பான பரப்புரை**

பிள்ளைகளின் கல்விக்கு இடையூறுகள் பல்வேறு காலநிலை தொடர்பான அனர்த்தங்களால் எழும் பொதுவான பிரச்சினையாகும். நிலச்சரிவு மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் பாடசாலை கட்டிடங்களை அழிக்கின்ற அதே நேரத்தில் பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் பிற பாடசாலை பொருட்களை இழப்பது கல்வி செயன்முறையை மேலும் தடுக்கலாம்.

**5. உடல் நலம், சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பரப்புரை**

நிலச்சரிவு மற்றும் வெள்ளம் போன்ற காலநிலை தொடர்பான அனர்த்தங்கள் பொது சுகாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்துவதுடன், ஆரோக்கியமான சூழலில் வாழ்வதற்கான அடிப்படை மனித உரிமையை பாதிக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளில், மக்கள் பெரும்பாலும் தற்காலிக முகாம்களில் வசிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதுடன், இது பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சூழலில் வாழ்வதற்கான உரிமையை சவாலுக்குட்படுத்தலாம். இது பெண்கள், பெண்பிள்ளைகள், கர்ப்பிணிப் பெண்கள், இயலாமை உடையவர்கள் மற்றும் மாற்றுப்பாலினத்தவர் போன்ற பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு மிகவும் முக்கியமானதுடன், அவர்களின் குறிப்பிட்ட சவால்களை எதிர்கொள்வதில் பரப்புரையாற்றலின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

நீர் ஆதாரங்களுக்கு ஏற்படும் சேதம் சுத்தமான குடிநீரை அணுகுவதில் சிரமங்களை ஏற்படுத்துவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக சவால்களை உருவாக்குகிறது.

காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் குழுக்களில் விவசாயிகள் உள்ளனர். மாற்றப்பட்ட மழைப்பொழிவு முறைமைகள், வெப்பநிலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் கடல் அரிப்பு போன்ற நிகழ்வுகள் விவசாய நடவடிக்கைகளை சேதப்படுத்துவதுடன், பயிரிடுகையின் தோல்விக்கு வழிவகுக்கும். இது உணவுப் பாதுகாப்பில் தாக்கம் செலுத்தி, உணவு நெருக்கடியாக அதிகரிக்கக்கூடும். இதன் விளைவாக, இது பொதுமக்களின் ஊட்டச்சத்து மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் பாதிக்கிறது.

## ■ முடிவுரை

இத்தொகுப்பானது இக்கட்டான சமயங்களிலும் நீதி மற்றும் சமத்துவத்திற்காக துணைநிற்கும் மனித உரிமைப் பாதுகாவலர்களின் துணிச்சலுக்கும் அர்ப்பணிப்பிற்குமான காணிக்கையாகும். இது அவர்களின் குரல்களை உயர்த்தவும், சவால்களை வெற்றி கொள்ளவும், உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தவும் உதவும் செயன்முறை கருவிகள் மற்றும் உத்திகளை வழங்குகிறது.

இந்த வழிகாட்டி பாதுகாவலர்களை முன்னோக்கி நகர்த்த ஊக்குவிப்பதுடன், அவர்களின் முயற்சிகள் ஒரு சிறந்த, நியாயமான உலகத்தை உருவாக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நாம் அனைவரும் ஒன்றிணைந்து, மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் மதிப்புமிக்கதாக இருப்பதையும் உறுதிசெய்ய முடிவதுடன், இது அனைவருக்கும் நீடித்த மாற்றத்தை உருவாக்குகிறது.

# மனித உரிமைகளுக்கான பரப்புரை

பரப்புரை வகிபாகமானது பங்கு நிறுவனங்களை பொறுப்பேற்க செய்வது மட்டுமல்லாமல் அது நலிவுற்ற சமுதாயங்களை பாதுகாப்பதற்கான சட்ட மற்றும் கொள்கை மாற்றங்களையும் செயற்படுத்துகின்றது.

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

Right To Life Human Rights Center
No. 56/02 Palitha Pl, Colombo 09,Sri Lanka
Tel/Fax : +94 011 266 9100
E-Mail : right2lifelk@gmail.com
Web: www.right2lifelanka.org

ISBN 978-624-5860-10-4
9 786245 860104